




PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்

# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY








சென்னை மலர்: 01 இதழ்: 246 18.04.2026 சனிக்கிழமை

Chennai Volume: 01 Issue: 246 Saturday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

சனிக்கிழமை

(18–04–2026)

பராபவ ஆண்டு, சித்திரை–5

பிறை: தேய்பிறை

திதி

பிரதமை பிற்பகல் 3.45 வரை பிறகு துவிதியை.

நட்சத்திரம்:

அசுவினி காலை 10.52 வரை பிறகு பரணி.

யோகம்

சித்த யோகம்

ராகுகாலம்

காலை 9.00–10.30 மணி

எமகண்டம்

நண்பகல் 1.30–3.00 மணி.

சூலம் – கிழக்கு.

நல்ல நேரம் :

காலை 7–8 மணி.

மாலை 5–6 மணி.

மேஷம் ................ தாமதம்
ரிஷபம் ................... வெற்றி
மிதுனம் ................ உயர்வு
கடகம் ................... முயற்சி
சிம்மம் ................ பெருமை
கன்னி ..................... அன்பு
துலாம் ................. நன்மை
விருச்சிகம் ................ நட்பு
தனுசு ........................ பரிவு
மகரம் ....................... சுகம்
கும்பம் ...................... சுபம்
மீனம் ................... பயணம்

## சென்னையில் ரூ.245 கோடி தங்க-வைர நகைகள் பறிமுதல்

**சென்னை, ஏப்.18:**

சென்னை அடையாறு பகுதியில் தேர்தல் பறக்கும்படை அதிகாரிகள் வாகனங்களை மடக்கி சோதனை போட்டனர். அப்போது, ஒரு வாகனத்தில் சோதனை போட்டபோது, அதில் பெரியஅளவில்தங்க-வைர நகைகள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அந்த நகைகள் பெட்டிகளில் வைக்கப்பட்டிருந்தது. அவற்றை சரிபார்த்தபோது அதன் மதிப்பு ரூ.245 கோடி என்று தெரியவந்தது.

சென்னை சவுகார்பேட்டையில் இருந்து பல்லாவரத்தில் உள்ள ஒரு நிறுவனத்திற்கு நகைகளை கொண்டு சென்றது கண்டறியப்பட்டது. ஆனால் அந்த நகைகளுக்கு உரிய ஆவணங்கள் இருந்தன.

இதுபோல் பெரிய அளவில் நகை உள்ளிட்டவைகளை எடுத்து செல்லும்போது தேர்தல் ஆணையத்தின் முன்அனுமதியை பெறுவது அவசியமான ஒன்றாகும். தேர்தல் ஆணையத்தின் அனுமதிபெறாமல், தங்க-வைர நகைகளை எடுத்துச்சென்றது தெரியவந்தது.

இதனால் ரூ.245 கோடி மதிப்புள்ள குறிப்பிட்ட நகைகளை பறக்கும்படை தேர்தல் அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். பின்னர் அந்த நகைகள் சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள வருமானவரித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது.

வருமான வரித்துறையினர் இதுகுறித்து விசாரணை நடத்தி, உரிய நடவடிக்கை எடுப்பார்கள் என்று தேர்தல் பறக்கும் படையினர் தெரிவித்தனர்.

# ஆதிக்கவாதிகளையும் அடிமைகளையும் எதிர்த்து போராடி வெல்வோம்!

## முதல்வர் ஸ்டாலின் சூளுரை

**சென்னை, ஏப்.18:**



ஆதிக்கவாதிகளையும் அடிமைகளையும் எதிர்த்து போராடி வெல்வோம் என்று தீரன் சின்னமலை பிறந்த நாளில் சூளுரைக்கிறேன் என்று தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை பிறந்த நாள் விழா, நேற்று தமிழ்நாடு முழுவதும் கொண்டாடப்பட்டு வருகின்றது. அவரது பிறந்த நாளில் முதல்வர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டிருக்கும் பதிவில் தெரிவித்திருப்பதாவது:

"பிரிட்டிஷாரைக் கலங்கடித்த தமிழ் வீரர் தீரன் சின்னமலை பிறந்தநாள்!

அன்று, நேரடியாகப் போரிட்டு வெல்ல முடியாத ஆங்கிலேய ஆதிக்கவாதிகள் சூழ்ச்சியால்தான் சின்னமலையை வீழ்த்த முனைந்தார்கள்!


இன்றோ, தமிழ்நாட்டுக்குள் நேரடியாக நுழைய முடியாத தில்லி ஆதிக்கவாதிகள் 'தொகுதி மறுவரையறை' எனும் சதித் திட்டத்தால் நம்மை அரசியல் வலிமையற்றவர்களாக்க முனைகிறார்கள்.

அன்று, சின்னமலையைக் காட்டிக் கொடுத்தான் ஒரு துரோகி. இன்றும் சில அடிமைகள் தங்கள் சுயநலத்துக்காகத் தாய்த்தமிழ்நாட்டின் எதிர்காலத்தையே ஆர்.எஸ்.எஸ். எஜமானர்களின் காலடியில் அடகு வைக்கின்றனர்.

இந்த ஆதிக்கவாதிகளையும் அடிமைகளையும் எதிர்த்து தமிழ்நாடு போராடு, வெல்லும் எனத் தீரன் சின்னமலை பிறந்தநாளில் சூளுரைக்கிறேன்!" எனக் குறிப்பிட்டுள்ளார்.

# கல்பாக்கம் முன்மாதிரி வேக ஈனுலை 'மைல்கல்': சி.பி.ராதாகிருஷ்ணன் புகழாரம்

**புதுடெல்லி, ஏப்.18:**



கல்பாக்கம் இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையத்தில் 500 மெகாவாட் மின்னுற்பத்தி திறன் கொண்ட முன்மாதிரி வேக ஈனுலை, மின் உற்பத்திக்கான அணுப்பிளவு செயல்பாட்டில் முதல் நிலையை எட்டியது மைல்கல் என மாநிலங்களவைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் வியாழக்கிழமை தெரிவித்தார்.

கல்பாக்கம் இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையத்தில் 500 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட முன்மாதிரி வேக ஈனுலை கடந்த ஏப். 6-ஆம் தேதி இரவு 8:25 மணிக்கு முதலாவது அணுப்பிளவு செயல்பாட்டு நிலையை எட்டியது. இது அணுமின் உற்பத்தியின் முதல் நிலை.

நீண்டகால எரிசக்திப் பாதுகாப்பை வழங்குவதிலும், உள்நாட்டு அணுமின் தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்துவதிலும் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க செயல்முறை. அணுமின் சக்தி திட்டத்தில் ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகவே இது பார்க்கப்படுகிறது.

இதன் முக்கியத்துவம் குறித்து மாநிலங்களவையில் சி.பி.ராதாகிருஷ்ணன் பேசியதாவது: ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகள், பொறியாளர்கள், தொழிற்சாலைகள் மற்றும் மத்திய அணுமின் துறையின் பல்வேறு பிரிவுகளில் பணியாற்றுபவர்களின் கூட்டு முயற்சியால் கல்பாக்கத்தில் பெரும் சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. இது நமது நாட்டின் முக்கிய மைல்கல்லாகும்.

இந்தச் சாதனையால் இந்தியாவின் மூன்று கட்ட அணுசக்தித் திட்டத்தில் அணு உலையில் புளூட்டோனியம் பயன்படுத்தும் இரண்டாம் கட்டத்தை நோக்கி நாம் நகர்ந்திருக்கிறோம். மூன்றாம் கட்டத்தில் தோரியம்-யூரேனியம் பயன்படுத்தப்படவுள்ளது.

முன்மாதிரி வேக ஈனுலையை இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையம் மற்றும் பாவினி இணைந்து உருவாக்கியுள்ளது. பிரதமா நரேந்திர மோடி 2024-ஆம் ஆண்டு முன்மாதிரி வேக ஈனுலையை நேரில் சென்று பாாவையிட்டாா.


2070-இல் கரியமில வாயு உமிழ்வை பூஜ்ஜியமாக்கும் இந்தியாவின் இலக்கு மற்றும் 100 ஜிகாவாட் அணுசக்தி உற்பத்தி இலக்கை அடைவதிலும் இந்தச் சாதனை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

இதை நிறைவேற்ற உறுதுணையாக இருந்த அனைவருக்கும் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்றாா.

# ஆர்.எஸ்.எஸ். நூற்றாண்டு விழாவுக்கு ரூ.76 லட்சத்துக்கு மத்திய அரசு விளம்பரம்!: ஆர்டிஅய் தகவல்

**புதுடெல்லி, ஏப்.18:**



No. MC-18/1/2026-C&M
Government of India
Ministry of Culture
AKAM Secretariat

3rd Floor, IGNCA, Janpath,
New Delhi – 110 001.
Dated: 13/04/26

To

Shri Ajay Basudev Bose,
House no 38, Matru Chhaya,
Near Hanuman Mandir,
Gopal Nagar, Badnera Rd,
Amravati, Pin - 444607.
Email: ajay.bosecrly@gmail.com

Subject: Information seeking under RTI Act, 2005 —reg.

Sir,

Please refer to your RTI application No. MCULT/R/E/25/00394 requesting information regarding total amount spent on advertisement given in various Print Media by Ministry of Culture on occasion of completion of 100 years of RSS.

In this regard, it is informed that an amount of Rs. 76,13,129 has been spent on Advertisement given in various Print Media by Ministry of Culture on the occasion of completion of 100 years of RSS.

In case, you are not satisfied with the information, you may file an appeal to Shri Rajeev Kumar, Director(C&M/Media Cell) & First Appellate Authority, 3rd Floor, IGNCA, Janpath, New Delhi.

Yours faithfully

ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் நூற்றாண்டு விழாவின் விளம்பரத்துக்காக மத்திய கலாசாரத் துறை ரூ. 76 லட்சம் செலவிட்டிருப்பது தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் தெரியவந்துள்ளது.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் நூற்றாண்டு நிறைவு விழா கடந்தாண்டு அக்டோபர் மாதம் நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது. தில்லியில் நடைபெற்ற விழாவில் பிரதமர் நரேந்திர மோடியும் கலந்து கொண்டார்.


சமூக ஆர்வலர் அஜய் வாசுதேவ் போஸ் என்பவர், ஆர்.எஸ்.எஸ். நூற்றாண்டு விழாவின் விளம்பரத்துக்காக மத்திய அரசு எவ்வளவு செலவிட்டது என்ற கேள்வியை தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் கேட்டிருந்தார்.

இந்த கேள்விக்கு மத்திய கலாசார அமைச்சகம் அளித்துள்ள பதிலில், ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, கலாச்சார அமைச்சகத்தால் பல்வேறு அச்சு ஊடகங்களில் வெளியிடப்பட்ட விளம்பரங்களுக்காகச் செலவிடப்பட்ட மொத்த தொகை ரூ. 76,13,129 எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய கலாசார அமைச்சகம் அளித்த பதிலின் நகல் இணையத்தில் பகிரப்பட்டு, "அரசு சாராத தனியார் அமைப்பின் விழாவின் விளம்பரத்துக்கு மத்திய அரசு செலவிட்டது ஏன்?" என்று பலரால் கேள்வி எழுப்பப்பட்டு வருகின்றது.

# மகளிர் இடஒதுக்கீடு சட்டம் 2023 அமல்: 30 மாதங்களுக்குப் பிறகு அரசிதழில் வெளியீடு

## 2034-ஆம் ஆண்டில்தான் நடைமுறைக்கு வருமாம்!



**புதுடெல்லி, ஏப்.18:**

மக்களவை மற்றும் மாநில சட்டப் பேரவைகளில் மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு அளிக்கும் 106-ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டம், 2023 அமலுக்கு வந்ததாக மத்திய சட்ட அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நிறைவேற்றப்பட்ட நிலையில், மகளிர் இடஒதுக்கீடு தொடர்பான சட்டத் திருத்தங்கள் மீது வெள்ளிக்கிழமை (ஏப்.17) வாக்கெடுப்பு நடைபெறவுள்ள நிலையில், 30 மாதங்களுக்குப் பிறகு 2026, ஏப்.16-ஆம் தேதி முதல் அமலுக்கு வந்ததாக அறிவிக்கை வெளியிடப்பட்டிருப்பது ஏன் என்ற குழப்பம் எழுந்துள்ளது.

2023-இல் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று மகளிருக்கான இடஒதுக்கீடு அளிக்கும் சட்டம் அமலுக்கு வந்தாலும், தற்போதைய மக்களவையில் இது நடைமுறைக்கு வராது. அடுத்ததாக மேற்கொள்ளப்படும் மக்கள்தொகைகணக்கெடுப்பின் அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பு செய்யப்பட்ட பின்னரே, இந்த இட ஒதுக்கீடு நடைமுறைக்கு வரும்.

அதாவது 2034-ஆம் ஆண்டில்தான் நடைமுறைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அந்த துறையைச் சேர்ந்த அதிகாரிகள் கூறுகின்றனர்.

# கட்டாய மத மாற்றத்தை பயங்கரவாத செயலாக அறிவிக்கக் கோரி உச்சநீதிமன்றத்தில் மனு

**புதுடெல்லி, ஏப்.18:**



கட்டாய மத மாற்றத்தை பயங்கரவாத செயலாக அறிவிக்கக் கோரி உச்சநீதிமன்றத்தில் வியாழக்கிழமை மனு தாக்கல் செய்யப்பட்டது.

மகாராஷ்டிர மாநிலம் நாஷிக்கில் உள்ள டிசிஎஸ் நிறுவனத்தின் அலுவலகத்தில் கட்டாய மத மாற்றம் மற்றும் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டதாக அங்கு பணியாற்றும் 8 பெண்கள் குற்றஞ்சாட்டிய நிலையில், இந்த மனுவை வழக்குரைஞா அஸ்வினி குமாா உபாத்யாய தாக்கல் செய்தாா.

அதில் கூறப்பட்டிருப்பதாவது: நாஷிக்கில் நிகழ்ந்த கட்டாய மத மாற்ற சம்பவத்தால் நாட்டு மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனா.

கட்டாய மத மாற்றமானது இறையாண்மை,மதச்சாா்பின்மை, ஜனநாயகம் மற்றும் சுதந்திரத்துக்கு மட்டுமின்றி சகோதரத்துவம், கண்ணியம், ஒற்றுமை மற்றும் தேச ஒருங்கிணைப்புக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடியது.

குழுவாக, மிகவும் முறைப்படுத்தப்பட்ட நடைமுறைகளின்கீழ் கட்டாய மத மாற்றங்கள் செய்யப்படுவது பாரத நியாய சம்ஹிதா சட்டம், 2023 பிரிவு 113-இன் கீழ் 'பயங்கரவாத செயல்' என்ற வரையறையில் கொண்டுவரப்படுகிறது.

கட்டாய மத மாற்றத்தை மேற்கொள்ள வெளிநாடுகளில் இருந்து நிதி அளிக்கப்பட்டு நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதால் இது பயங்கரவாத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம், 1967-இன் கீழும் பயங்கரவாத செயலாகவே கருதப்படுகிறது. அரசமைப்புச் சட்டத்தின் சட்டப்பிரிவு 25-இன்கீழ் ஒரு மதத்தை சுதந்திரமாக பின்பற்ற உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் அதை தவறாக பயன்படுத்தி கட்டாய மத மாற்றத்தில் சிலா ஈடுபடுகின்றனா. எனவே, கட்டாய மத மாற்றத்தை பயங்கரவாத செயலாக அறிவித்து நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். மத்திய மற்றும் மாநில அரசுகள் இதை கட்டுப்படுத்த சிறப்பு நீதிமன்றங்களை ஏற்படுத்தி தண்டனைகள் வழங்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

# இணையதளங்கள், கேபிள் டிவிக்களில் 'ஜனநாயகன்' படத்தை ஒளிபரப்ப இடைக்காலத் தடை

**சென்னை, ஏப்.18:**

சென்னை உயர்நீதிமன்றத்தில் படத் தயாரிப்பு நிறுவனமான கேவிஎன். புரொடக்ஷன்ஸ் சார்பில் வழக்கு தொடரப்பட்டது. நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி முன்பு இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில், 'தணிக்கை வாரியம் சான்றிதழ் வழங்கும் முன்பாகவே இணையதளத்தில் ஜனநாயகன் திரைப்படம் கசியவிடப்பட்டுள்ளது. அதிக செலவில் எடுக்கப்பட்ட இந்த படத்தை சட்டவிரோதமாகஇணையதளங்கள், கேபிள் டிவிக்களில் ஒளிபரப்ப தடை விதிக்க வேண்டும்' என்று வாதிடப்பட்டது. இதையடுத்து, ஜனநாயகன் படத்தை இணையதளங்கள், கேபிள் டிவிக்களில் சட்டவிரோதமாக ஒளிபரப்பக் கூடாது என இடைக்காலத் தடை விதித்து நீதிபதி உத்தரவிட்டார். மேலும் விசாரணையை ஜூன் 2-ம் தேதிக்கு தள்ளிவைத்தார்.




## தாய்க்கு ஆதரவாக பிரசார களத்தில் குதித்த டாக்டர் அன்புமணியின் மகள்கள்



**தருமபுரி,ஏப்.18:** எந்த தேர்தலிலும் இல்லாத வகையில் இந்த தேர்தலில் சில தொகுதிகளில் வேட்பாளர்கள் தங்களது மகன், மகள்களை தீவிர பிரசாரத்தில் இறக்கி உள்ளனர். பொதுவாக தலைவர்கள் அல்லது பெரியவர்கள் தான் தேர்தல் பிரசாரங்களில் வலம் வருவது வழக்கம். இந்த தேர்தலில் சில வேட்பாளர்கள் தங்கள் மகன், மகள்களையும் தீவிர பிரசாரத்தில் இறக்கி விட்டுள்ளனர்.

தருமபுரி தொகுதியில் பா.ம.க வேட்பாளராக போட்டியிடும் சவுமியாவும் தனது மகள்களை களத்தில் இறக்கி விட்டுள்ளார். இவரது 2 மகள்களும் வீடு வீடாக சென்று தாய்க்காக தீவிர பிரசாரம் செய்கின்றனர். தனது அம்மாவுக்காக மகள் வேகாத வெயிலில் காய்ந்து, பிரசாரம் செய்ததை பல பெற்றோர்கள் நெகிழ்ச்சியுடன் பார்த்தனர்.

30 வயதுக்குட்பட்ட இளைஞர்களை கவர வேண்டும் என்றால் இளைஞர்கள் பிரசாரம் செய்தால் சரியாக இருக்கும் என வேட்பாளர்கள் நினைக்கின்றனர். அது மட்டுமல்லாமல், பல வேட்பாளர்கள், தங்கள் தேர்தல் வரவு, செலவுகளை கவனிக்கும் பொறுப்பை மகன், மகள்கள் வசம் கொடுத்துள்ளனர். அடுத்த தலைமுறை அரசியல்வாதிகள் உருவாக்கப்படுவதாகவே இதனை கருதலாம் என்கிறார்கள் அரசியல் விமர்சகர்கள்.

## பஸ்களில் கட்டணமில்லாமல் பயணிக்கலாம் சேலம் கலெக்டர் அறிவிப்பு



**சேலம், ஏப்.18:** சேலம் மாவட்ட தேர்தல் அலுவலர், கலெக்டர் அருண் தம்புராஜ் தெரிவித்துள்ளதாவது:-

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் வாக்குப்பதிவு நாளான 23-ந்தேதி அன்று 85 வயதிற்கு மேற்பட்ட முதியவர்கள், கண்பார்வை குறைபாடுய மாற்றுத்திறனாளிகள் மற்றும் அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளும் வாக்களிக்க ஏதுவாக தேர்தல் தினத்தன்று மட்டும் ஆதார் அட்டை, வாக்காளர் பூத் சீலிப் அல்லது வாக்காளர் அடையாள அட்டை ஆகிய ஆவணங்களை காண்பித்து சாதாரண நகரப் பேருந்துகளில் கட்டணமில்லாமல் பயணம் மேற்கொள்வதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எனவே மாற்றுத்திறனாளிகள் மற்றும் 85 வயதிற்கு மேற்பட்ட முதியவர்கள் இவ்வாய்ப்பினை பயன்படுத்தி பயனடையுமாறும், அனைவரும் 100 சதவீதம் வாக்களித்து தங்களது ஜனநாயக கடமையாற்றிட வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தைலாபுரம் இல்லத்தில் தபால் வாக்கு செலுத்தினார் பா.ம.க நிறுவனர் ராமதாஸ்



85 வயதுக்கு மேற்பட்டவர்களிடம் தபால் வாக்கை பெறும் நிலையில் விழுப்புரம் தைலாபுரத்தில் உள்ள தனது இல்லத்தில் ராமதாஸ் தபால் வாக்கை செலுத்தினார்.

### பெங்களூருவில்

## ரூ.23.61 கோடி போதைப் பொருள் பறிமுதல்



**பெங்களூரு, ஏப்.18:** பெங்களூரு மாநகர காவல் ஆணையர் சீமந்த் குமார் சிங் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: பெங்களூரு மத்திய குற்றப்பிரிவு போலீஸார் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினருடன் இணைந்து பாகலூர், பானசவாடி உள்ளிட்ட 8 காவல் நிலைய சரகத்துக்குட்பட்ட இடங்களில் போதைப் பொருள் கடத்தலைத் தடுக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இதில் மொத்தமாக 5.91 கிலோ எம்டிஎம்ஏ, 21.82 கிலோ ஹைட்ரோ கஞ்சா, 1.51கிலோ கோக்கைன் உள்ளிட்ட போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இது தொடர்பாக வெளிநாட்டினர் 3 பேர் (2 பெண்கள் ) உட்பட 10 பேர் கைது செய்யப்பட்டனர். இதில் 5 பேர் வெளி மாநிலங்களை சேர்ந்தவர்கள் ஆவர். கைதானவர்களிடம் இருந்து 3 கார், 2 இரு சக்கர வாகனங்கள், 9 செல்போன்கள், ரூ.50 ஆயிரத்து 500 ரொக்கம், 28 கிராம் தங்க நகைகள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன.

பறிமுதல் செய்யப்பட்ட போதைப் பொருட்களின் சந்தை மதிப்பு ரூ.23.61 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. கைதான 10 பேர் மீதும் வழக்குப் பதிவு செய்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். முதற்கட்ட விசாரணையில், 'கூரியர் மூலம் வெளிநாட்டில் இருந்தும் வெளி மாநிலங்களில் இருந்தும் போதைப் பொருளை வரவழைத்து, பெங்களூருவில் கல்லூரி மாணவர்கள் மத்தியில் விற்பனை செய்தது' தெரியவந்துள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## "சாதி ஒழிப்புக்கு கல்வியை தவிர வேறு ஆயுதம் இல்லை" - நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் கருத்து




**மதுரை, ஏப்.18:** சாதி ஒழிப்புக்கு கல்வியை தவிர வேறு ஆயுதம் இல்லை என உயர் நீதிமன்ற நீதிபதி என்.ஆனந்த் வெங்கடேஷ் பேசினார்.

மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கறிஞர் சங்கம் சார்பில் அம்பேத்கர் பிறந்த நாள் விழா நடைபெற்றது. சங்கத் தலைவர் பாஸ்கரன் தலைமை வகித்தார். செயலாளர் மோகன் குமார் முன்னிலை வகித்தார்.

உயர் நீதிமன்ற நீதிபதி என்.ஆனந்த் வெங்கடேஷ் பேசியதாவது: கல்வி ஒன்றே விடுதலை தரும் என நம்பியவர் அம்பேத்கர். புத்தரின் வாழ்க்கை வரலாறு புத்தகம் தான் அவரை மாற்றியது.

இளம் வழக்கறிஞர்கள் அம்பேத்கரை மேலும் படிக்க வேண்டும். சாதி ஒழிப்புக்கு கல்வி என்ற ஆயுதத்தை தவிர வேறு சிறந்த ஆயுதம் இல்லை. இதை உணர்த்தியவர் அம்பேத்கர்.

அம்பேத்கருக்கு பல இடங்களில் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. அந்த சிலைகளை வேலி போட்டு அடைத்திருப்பது அவலமானது. சாதி மறுப்பாளர்களால் தான் சாதியை ஒழிக்க முடியும். தான் இந்த சாதியை சேர்ந்தவன் என பெருமை பேசும் யாராலும் சாதியை ஒழிக்க முடியாது.

அம்பேத்கரின் சிந்தனைகளை ஏற்க மறுப்பவர்கள் அவரது சிலையை உடைக்க நினைக்கிறார்கள். அவரது சிந்தனைகளை யாராலும் தகர்க்க முடியாது. இவ்வாறு அவர் பேசினார்.

மாவட்ட நீதிபதி சிவகடாட்சம், குற்றவியல் நீதிபதி செல்லப் பாண்டி மற்றும் நீதிபதிகள், சங்கப் பொருளாளர் ராஜ்மோகன், துணைத் தலைவர்கள் வீர பெருமாள், சிவானந்தம், துணைச் செயலாளர்கள் பாலமுருகன், கார்த்திகேயன், நூலகர் சுரேஷ், இந்திய வழக்கறிஞர் சங்கத்தின் தமிழக தலைவர் கு.சாமிதுரை உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## ஈரோட்டில் பல்லுயிர் பாரம்பரியத் தலம் பாதிப்பு: உடனடி நடவடிக்கை



**ஈரோடு, ஏப்.18:** ஈரோடு மாவட்டத்திலுள்ள பல்லுயிர் பாரம்பரியத் தலமான எலத்தூர் குளம், சிலர் சட்டவிரோதமாக மீன் பிடித்தல், பறவைகளை வேட்டையாடுதலில் ஈடுபடுவதன் காரணமாகச் சுற்றுசூழல் சீரழிவுக்கு ஆளாகியுள்ளது. அந்த பாதிப்பில் இருந்து இப்பகுதியை மீட்க உடனடி நடவடிக்கைகள் தேவை என்று அவ்வட்டாரத்தில் வசிப்பவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

ஈரோடு மாவட்டத்தில் உள்ள எலத்தூர் குளம், கடந்த 2025 செப்டம்பர் மாதம் தமிழ்நாடு அரசால் மாநிலத்தின் மூன்றாவது பல்லுயிர் பாரம்பரியத்தலமாக அறிவிக்கப்பட்டது. இது ஈரோடு மாவட்டத்தின் முதல் பல்லுயிர் பாரம்பரியத்தலமான இப்பகுதியில் 200-க்கும் மேற்பட்ட பறவை வகைகள், 695க்கும் மேற்பட்ட உயிரினங்கள் வாழ்வதாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், வலசை காலங்களில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பறவைகள் தங்குவதும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு தொடக்கத்தில், எலத்தூர் குளம் பகுதியில் பறவைகள் வேட்டை, மீன்பிடித் தடையை மீறிச் சட்டவிரோத நடவடிக்கைகள் அதிகரித்திருந்தது சுற்றுச்சூழல் பாதுகாப்பு குழுக்களால் அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. இதையடுத்து, தமிழ்நாடு வனத்துறை தற்காலிக வேட்டை தடுப்புப் பாதுகாவலரை அங்கு நியமித்தது.

மேலும், எலத்தூர் பல்லுயிர் மேலாண்மைக் குழு மற்றும் எலத்தூர் பேரூராட்சி இணைந்து தேசிய அளவில் முக்கியத்துவம் வாய்ந்த இந்த வாழ்விடத்தைக் காப்பாற்றும் பணியில் ஈடுபட்டிருந்தது.

கடந்த ஏப்ரல் 9ஆம் தேதி, வனத்துறையால் தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்ட வேட்டை தடுப்புப் பாதுகாவலரின் பணி நிறுத்தப்பட்டது.

அந்தத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு முடிவடைந்ததே அதற்குக் காரணமென்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## "அன்பில் மகேஸ் வீட்டுக் கதவை அமலாக்கத் துறை தட்டினால் நாம் பொறுப்பல்ல" - அண்ணாமலை



**திருச்சி / புதுக்கோட்டை, ஏப்.18:** திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் தொகுதி அதிமுக வேட்பாளர் ப.குமாரை ஆதரித்து பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை நேற்று இரவு திருவெறும்பூரில் பிரச்சாரம் செய்தார்.

அப்போது அவர் பேசியது: பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தனது அமைச்சர் வேலையைப் பகுதி நேரமாகத்தான் பார்க்கிறார். முழுமையாக உதயநிதி ரசிகர் மன்றத் தலைவராக உள்ளார். அரசுப் பள்ளிகளில் மேற்கூரை இடிந்து விழும் நிலையில் உள்ளன. புதுக்கோட்டையில் உள்ள பள்ளிகளில் மாணவர்கள் வெட்டவெளியில் அமர்ந்து படிக்கும் அவல நிலை உள்ளது.

அவரது தொகுதியில் கூட பல பள்ளிக் கட்டிடங்கள் சேதமடைந்த நிலையில் தான் உள்ளன. அவர் வாக்குறுதி அளித்தபடி அரியமங்கலம் குப்பைக்கிடங்கை அகற்றவில்லை. திருச்சி பழைய பால் பண்ணை- துவாக்குடி அணுகு சாலை அமைக்கவில்லை. தமிழகத்தில் ஜாபர்சாதிக் மூலம் தான் கஞ்சா கடத்தப்படுகிறது. அமைச்சர் அன்பில் மகேஸ் வீட்டுக் கதவை அமலாக்கத் துறை தட்டினால் நாம் பொறுப்பல்ல. அன்பில் மகேஸை தோற்கடித்து, அதிமுக வேட்பாளர் குமாரை வெற்றி பெறச் செய்யுங்கள். இவ்வாறு அவர் பேசினார்.

மேலும், தமிழகத்தில் திருவெறும்பூர், புதுக்கோட்டை, சிவகங்கை உட்பட 36 இடங்களில் உள்ள அரசுப் பள்ளிகளின் அவலநிலையை ஆல்பமாக தயாரித்து வைத்துள்ளதாகக் கூறி, அதை மக்களிடம் அண்ணாமலை காட்டினார்.

மீண்டும் புதுக்கோட்டை தொகுதி: முன்னதாக, புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி தொகுதி பாஜக வேட்பாளர் கவிதா ஸ்ரீகாந்தை ஆதரித்து ஆவுடையார்கோவிலில் நேற்று அண்ணாமலை பேசியது: தொகுதி மறுவரையறை மூலம் தமிழகத்தில் உள்ள மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை 59 ஆக உயரும். இதன் மூலம் ஏற்கெனவே நீக்கப்பட்ட புதுக்கோட்டை மக்களவைத் தொகுதி மீண்டும் ஏற்படுத்தப்படும்.

அறந்தாங்கி தொகுதியில் போட்டியிடும் எஸ்.டி.ராமச்சந்திரனுக்கு திருநாவுக்கரசரின் மகன் என்பதைத் தவிர வேறு எந்த அடையாளமும் இல்லை. முன்னாள் திமுக எல்எல்ஏ உதயம் சண்முகத்தின் மகன் சரண், வீடு வீடாகச் சென்று காங்கிரஸ் கட்சிக்கு வாக்களிக்க வேண்டாம் என்று பிரச்சாரம் செய்து வருகிறார்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் மத்திய அரசின் உதவித் தொகையை பெற்று வந்த 51 ஆயிரம் பேர் திமுக ஆட்சியில் நீக்கப்பட்டுள்ளனர். பழனிசாமி முதல்வராக பொறுப்பேற்றதும் அவர்களுக்கு மீண்டும் உதவித்தொகை வழங்கப்படும் என்றார்.

இதைத்தொடர்ந்து புதுக்கோட்டையில் பாஜக வேட்பாளர் என்.ராமச்சந்திரனை ஆதரித்தும், கந்தர்வக்கோட்டையில் சி.உதய குமாரை ஆதரித்தும் அண்ணாமலை பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

## தீரன் சின்னமலையின் வீரத்தையும் புகழையும் போற்றி வணங்குகிறேன்



**எடப்பாடி பழனிசாமி**

**சென்னை, ஏப்.18:** அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு எதிரான இந்திய சுதந்திர போரில் நெஞ்சுரத்தோடு தனது இறுதி மூச்சு வரை போராடி, அந்நிய ஏகாதிபத்தியத்திற்கு சிம்ம சொப்பனமாக திகழ்ந்து, தன் இன்னுயிர் நீத்த வீரத்தமிழ்மகன், ஓடாநிலைக்கோட்டையின் ஒப்பற்ற மாவீரர் தீரன் சின்னமலை அவர்களின் பிறந்தநாளில் அவர்தம் வீரத்தையும், புகழையும் போற்றி வணங்குகிறேன்.

அன்று சின்னமலையைக் காட்டிக் கொடுத்த துரோகியைப் போல, இன்றும் கர்நாடக காங்கிரஸ் அரசிடம் தமிழ்நாட்டின் நீராதார உரிமைகளையும், பாலியல் SIR-களிடம் தமிழகப் பெண்களின் பாதுகாப்பையும், போதை மாபியாக்களிடம் இளைஞர்களின் எதிர்காலத்தையும் அடகு வைத்துவிட்டது திமுக எனும் தீயசக்திக் கூட்டம்.

ஒவ்வொரு தமிழரின் வாழ்வையும் காக்க வேண்டிய வரலாற்றுப் போர்களத்தில், சின்னமலை விதைத்த தீரத்தோடு சமர் செய்து, தீயசக்தி திமுகவை வேரடி மண்ணோடு வீழ்த்திட சூளுரைக்கிறேன் என்று கூறியுள்ளார்.

## குஷ்பு சென்ற ஹெலிகாப்டரில் தேர்தல் பறக்கும் படையினர் சோதனை



**உதகை, ஏப்.18:** தமிழகத்தில் வரும் 23ம் தேதி ஒரே கட்டமாக சட்டமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெறுகிறது. இதற்கான ஏற்பாடு பணிகளை தேர்தல் ஆணையம் தீவிரமாக நடத்தி வருகிறது.

234 தொகுதிகளிலும் திமுக கூட்டணி, அதிமுக தலைமையிலான என்டிஏ கூட்டணி, நாம் தமிழர், தமிழக வெற்றிக் கழகம் உள்ளிட்ட கட்சிகள் தீவிரமாக வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றன.

இதற்கிடையே, பணப்பட்டுவாடாவை தடுக்கும் வகையில் தேர்தல் பறக்கும் படையினர் தமிழகம் முழுவதும் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவ்வபோது, பிரச்சாரங்களுக்கு பயணிக்கும் கட்சி தலைவர்கள், வேட்பாளர்களின் வாகனங்களையும், அவர்கள் செல்லும் ஹெலிகாப்டர்களையும் தேர்தல் பறக்கும் படையினர் சோதனை செய்து வருகின்றனர்.

இந்நிலையில், உதகையில் தமிழக பாஜக துணைத்தலைவர் குஷ்பு சென்ற ஹெலிகாப்டரில் தேர்தல் பறக்கும் படையினர் சோதனையில் ஈடுபட்டனர்.

## "நடிகருக்காக விசில் அடிக்கலாம், நாட்டை ஒப்படைக்க முடியாது"



**பிரகாஷ்ராஜ் கருத்து**

**பழநி, ஏப்.18:** நடிகருக்காக விசில் அடிக்கலாம். ஆனால், நாட்டை தூக்கிக் கொடுக்க முடியாது என்று நடிகர் பிரகாஷ்ராஜ் தெரிவித்துள்ளார்.

பழநி தொகுதியில் திமுக கூட்டணி சார்பில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் என்.பாண்டி போட்டியிடுகிறார். இவரை ஆதரித்து, அக்கட்சியின் இளைஞர் அணி, மாணவர்கள் அணி ஒருங்கிணைத்து நடத்திய இளைஞர் கலை விழா நேற்று நடைபெற்றது.

அதில், நடிகர் பிரகாஷ்ராஜ் பங்கேற்று பேசியதாவது: தமிழகத்தில் நடக்கவிருக்கும் தேர்தல், திராவிட மாடல், அடிமை மாடல், சினிமா மாடல் ஆகிய 3 மாடலுக்குமான தேர்தல். திராவிட மாடல் கல்வி கொடுத்தது, மொழியைக் காப்பாற்றியது. இனம் மானத்தை காப்பாற்ற போராடிக் கொண்டிருக்கிறது.

தமிழகத்துக்கு துரோகம்: அடிமைமாடல், நம் தன்மானத்தை, சுய மரியாதையை தூக்கிச் சென்று மோடி காலடியில் வைக்கும். தொகுதி மறுவரையறை மசோதா அமலுக்கு வந்தால் தென்னிந்தியாவின் 50 ஆண்டுகால அரசியல் மாறிவிடும்.

மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையறை செய்யப் போவதாக கூறுகின்றனர். இந்த மசோதாவால் தமிழகத்துக்கு துரோகம் நடக்கிறது. அதற்கு இந்த அடிமை மாடல் ஆதரவு கொடுத்து வருகிறது.


ஒற்றுமைக்கும், பிரிவினைக்கும்....: திருப்பரங்குன்றத்தை வைத்து மதுரையை, மணிப்பூராக மாற்ற முயற்சிக்கின்றனர். மதுரையை அடுத்து பழநிதான். சினிமா மாடலில் ஒரு பாடலில் மருத்துவர், பொறியாளர், முதல்வராகி விடலாம். அந்த நடிகர் (விஜய்) மக்களுக்கோ, மொழிக்கோ, தன்மானத்துக்கோ பிரச்சினை வந்தபோது வந்து நின்றிருக்கிறாரா?

நடிகருக்காக விசில் அடிக்கலாம். ஆனால், நாட்டை தூக்கிக் கொடுக்க முடியாது. நமக்கு எந்த மாடல் வேண்டும் என்று முடிவு செய்து கொள்ளுங்கள். இந்த தேர்தல் திமுக, அதிமுக மற்றும் திமுக, தவெகவுக்கான தேர்தல் இல்லை. ஒற்றுமைக்கும், பிரிவினைக்கும் நடக்கும் தேர்தல். இவ்வாறு அவர் பேசினார்.


திருப்பூர் ரியல் எஸ்டேட் விற்பனை
சிறந்த முதலீட்டு வாய்ப்பு
PREMIUM PLOT SALE
Tiruvallur to Oothukottai Highway NH on Rd Site
VGP THIRU NAGAR, PHASE-1
Location: (Nr Mylapore Jn)
Direction: N/ Face
Total Area: 2400 sft
Price: RS.650/sft
LIMITED PLOTS AVAILABLE!
Contact Us: 9445315510 / 9283257193
VGP Developers - Your Trusted Partner


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


WANTED:
FEMALE ANCHORS
Age 18 to 35
Good Looking
Work from Home
(Full-time/Part-time)
Salary: Rs. 20,000 to 50,000
Call / Whatsapp:
7789941009
9337501889


! WANTED !
Muslim Lady
Accounts Assistant
Qualification: B.Com / Tally Knowledge Required
Company: Perfume Manufacturing Company
Location: Chrompet
Contact: 99401 46318


WANTED
IMMEDIATE OPENINGS AVAILABLE!
HOUSEKEEPING STAFF
(Male & Female)
MARKETING EXECUTIVE - ELECTRICAL FIELD
(Male & Female)
ELECTRICIAN & HELPERS
(Weekly / Monthly Wages)
ELECTRICAL SUB-CONTRACTOR
DRIVER
GOOD SALARY | FLEXIBLE WORK OPTIONS | IMMEDIATE JOINING
CONTACT NOW: 9363133253
HURRY! LIMITED VACANCIES AVAILABLE!


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship:
Clinical Training
Counseling Practice
Case Work
Jobs:
Social Worker
Jr Psychologist
Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com


WANTED
ஆட்கள் தேவை
சமையல்
வீட்டுவேலை
குழந்தை
நோயாளி
தங்கி
தங்காமல்
சென்னையில் தங்கி / தங்காமல்
வேலை செய்யலாம்
தொடர்புக்கு
8148215778
8248610592
A trustworthy help service for Chennai families


GREEN HOUSING & PROPERTIES
மண்ணும் பொன்னும்
சிறுசேமிப்பு திட்டம் 50 - 50 EMI
OFFER PRICE
ரூபாய்
₹ 1.80
லட்சம்
800 SQFT
FREE FREE!!!
10
கிராம் GOLD COIN
சேமியுங்கள்
VILLA PLOTS FOR SALE
BOOK NOW
+91 77083 95118


ATTENTION
ரயில்வே மின்சார
ஒப்பந்த பணிக்கு
10th., ITI Electrical B- Licence, Dip EEE
தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.


சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா
தீபாவளி
RAVIKUMAR AND COMPANY


குன்னத்தூரும்
உடனடி வேலைவாய்ப்பு
WANTED
டெல்டா டைமண்ட் டூல்ஸ்
சென்னை - குன்றத்தூர்
உதவியாளர் (HELPER)
அடிப்படை அறிவு, உடல் தகுதி, அனுபவம் தேவையில்லை
டர்னர் (TURNER)
டர்னர் தொழில்முறை அனுபவம் தேவை, வரைபடங்கள் படித்தல்
தகுதி: 10வது / ITI (FITTER/TURNER)
வயது வரம்பு: 18-35
சம்பளம்: நல்ல ஊதியம் + கூடுதல் நன்மைகள்
தெளிவுக்கு வருவன்
தொடர்புக்கு / For Details:
pH: 9841738379



just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருட்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.



THANIGAI
WANTED ISO
REAL ESTATE MARKETING
PART TIME & FULL TIME
Flexible work
No Age Limit / No Investment
No Experience/No Qualification
No Risk / No Target
Simple work - just refer customers only
Office Location : Near Perambur Railway Station
K. Ramakrishnareddy 90879 55111


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..
www.arultharumdeivam.com


WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872

## கவிதை அரங்கம்!





காலங்கள் மாறினாலும்,
உன் மீதான என் காதல்
மட்டும் மாறாது.

பூமிக்கு சூரியன்
எப்படியோ, என் வாழ்விற்கு
நீ அப்படித்தான்.

உன்னோடு செலவிடும்
ஒரு நொடி, வாழ்நாள்
முழுவதும் நினைக்கத்
தகுந்தது.

நீ ஒரு கவிதை, நான்
அதை ரசிக்கும் வாசகன்.

என் மரணத்தின் போது
உன் மடி இருந்தால்,
அதுவே என் மோட்சம்.

## வாழ்க்கை தத்துவம்...




தோல்வி இதயத்துக்கு
போகக் கூடாது
வெற்றி தலைக்கு
போகக் கூடாது

யாருக்காகவும் உன்னை
மாற்றி கொள்ளாதே
ஒருவேளை மாற நினைத்தால்
ஒவ்வொரு மனிதர்களுக்கும்
மாற வேண்டி வரும்

பேசுபவற்றை தவறாக புரிந்துக்
கொள்பவனிடம் மௌனமாகவும்
தவறாக பேசுவதற்காகவே
வாயைத் திறப்பவர்களிடம்
விலகியும் இருங்கள்

# ஊருக்கு வாழ்வதில் தோல்வி இல்லை



முகூர்த்தம் விடியற்காலை ஆறு மணிக்கே என்பதால் மலர்கொடி சீக்கிரமா எழுந்து சுடு தண்ணி வச்சி குளிச்சிட்டு ஐந்து மணிக்கே பஸ் ஏறி கல்யாண மண்டபத்தை வந்தடைந்தால், மண்டப வாயிலில் எல்லோரையும் வரவேற்ற சரண்யா ஆச்சர்யத்தோடு,,,

"என்னங்க அக்கா, ரொம்ப சிம்பிளா வந்திருக்கீங்க, எப்போதும் கலக்கலா கலர்புல்லா வருவீங்க, இப்போ என்னாச்சு" என்றாள்

"அதை ஏன்டி சரண் கேக்குற, இந்த ஊர்ல ஒரு நல்ல சேலை கட்ட முடியல, ஒரு கொலுசு போடமுடியல, தலசீவி ஒரு மொழம் மல்லிகைப்பூக்கூட வைக்க முடியல, டிசைனா ஒரு சுடிதார்கூட போட முடியல"

"ஏங்க அக்கா அப்படி சொல்றீங்க, நம்ம இஷ்டம்,நாம மேக்கப் பன்றோம், இதுக்காக நீங்க எதுக்கு சிம்பிளா வர வேண்டும்"

"அடிப்போடி கொஞ்சம் நீட்டா ட்ரெஸ் பன்னினாலே இதுக்கெல்லாம் இது தேவையா, பேரன் பேத்தி எடுத்துட்டு, எப்பிடி மினிக்கிக்கிட்டு போவுது பாருன்னு ஜாடையில பேசுறாளுவோ, இதெல்லாம் கேட்டா எப்படி நீட்டா வர தோணும் சொல்லு"

"அக்கா ஊரு உலகம் ஆயிரம் சொல்லும், அதை காதில் வாங்காதீங்க, நம்ம இஷ்டத்துக்குதான் வாழணும், அக்கம் பக்கம் சொல்றதை கேட்டா வாழ முடியாது, நாம ஊருக்கு வாழல, நமக்காக வாழ்றோம்"

"அப்படி இல்ல சரண்யா, அவங்க என்ன சொல்றது, இவங்க என்ன சொல்றது, என் இஷ்டம் நான் எப்படி வேண்டுமானாலும் இருப்பேன், என்ன வேண்டுமானாலும் செய்வேன், நான் சம்பாதிக்கிறேன், நான் வாழ்கிறேன்னு சொல்றவங்க எல்லாரும் யாருக்கும் பயப்படாமல், மரியாதை கொடுக்காமல் இருப்பதால்தான் வீணா போய் சீரழியுறாங்க, ஊரு உலகத்துல சொல்றதை கேட்பவர்களும், அக்கம் பக்கம் சொல்றதை கேட்பவர்களும், அவங்க என்ன சொல்வாங்களோ, இவங்க என்ன சொல்வாங்களோன்னு பயப்படுறவங்களும், நேர்மையா இருப்பாங்க, வாழ்க்கை நல்லவே இருக்கும், ஊருக்காக வாழ்வதில் ஒருபோதும் தோல்வியில்லை, இதைதான் படிக்காதவன் படத்தில் ஒரு பாடலில் வைரமுத்து அவர்கள் சொல்லி இருக்காங்க, "

"என்ன பாட்டு அக்கா"

"ஒரு கூட்டுக்கிளியாக என்ற பாடலில் பேருக்கு வாழ்வது வாழ்க்கை இல்லை, ஊருக்கு வாழ்வதில் தோல்வி இல்லைன்னு, இதுதான் உண்மையும் கூட"

"அப்படின்னா நீங்க நீட்டா வந்து இருக்கலாமே அக்கா"

"வந்திருக்கலாம்தான்,,, ஆனா,,, ஒரு குறிப்பிட்ட வயசுக்கு மேல் சிம்பிளா இருப்பதுதான் நமக்கும் நம்ம வயசுக்கும் நல்லது, அதான் சிம்பிளாவே வந்தேன் சரண்யா,"

"ஓ,,,, இதுவும் சூப்பராதான் இருக்கு அக்கா," ன்னு சொல்லும்போதே மண்டபத்திலிருந்து ஒரு குரல் கேட்டது, வச வசன்னு பேசிக்கிட்டு நிக்காம பொண்ண கூட்டிட்டு வாங்க முகூர்த்தத்திற்கு நேரமாச்சி,,,

மணப்பெண்ணை அழைச்சிட்டு வரும் குழுவில் மலர்கொடியும் இருந்தால், பெண்ணின் மேக்கப்பை பொறாமையோடு பார்த்தப்படி.

**நாகை ஆசைத்தம்பி**
கோவை

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



டாக்டர் - நோயாளி ரகளை

நோயாளி: "டாக்டர், எனக்கு எதைச் சாப்பிட்டாலும் வாந்தி வருது!"

டாக்டர்: "அப்படின்னா ஒண்ணு பண்ணுங்க, சாப்பிடுறதை நிறுத்திட்டு 'வாந்தி' எடுங்க!"



## தினம் ஒரு சமையல்



# கருவேப்பிலை குழம்பு

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| 150 கிராம் | -கருவேப்பிலை |
| 100கிராம் | -சின்ன வெங்காயம் |
| 3 | -தக்காளி |
| ஒரு சிறிய உருண்டை | -புளி |
| 4டேபிள் ஸ்பூன் | -நல்எண்ணெய் |
| 5 | -வெந்தயம் |
| 1டிஸ்பூன் | -கடுகு |
| 3 | -சுண்டைக்காய் வத்தல் |
| 2டிஸ்பூன் | -மிளகாய் தூள் |
| உப்பு | -தேவையான அளவு |
| 1 டேபிள் ஸ்பூன் | -மல்லி தூள் |

**செய்முறை:**



ஒரு கடாயில் கருவேப்பிலையை நன்கு மொருகளக வதக்கவும். அதே கடாயில் சிறிது எண்ணெய் ஊற்றி சுண்டைக்காய் வத்தல் நன்கு பொரித்து எடுக்கவும்.

வத்தளை எடுத்து சிறிது எண்ணெய் ஊற்றி வெந்தயம், வெங்காயம் போட்டு நன்கு வதக்கிய பின்பு தக்காளி மிளகாய் தூள்,மல்லி தூள், மஞ்சள் தூள் உப்பு சேர்த்து நன்கு பச்சை வாசனை போகும் வரை வதக்கவும். கருவப்பிலை மற்றும்வத்தளை நன்கு மிக்ஸில் அரைத்து கொள்ளவும்.

புளி கரைத்து சேர்த்து, கருவேப்பிலை அரைத்தது சேர்த்து தேவையான அளவு தண்ணீர் சேர்த்து நன்கு கொதிய விடவும். நன்கு கொதித்ததும் எண்ணெய் பிரிந்து வந்ததும் குழம்பை இறக்கவும்.

## அவுரி பயன்கள்



அவுரி (INDIGO) ஒரு சக்திவாய்ந்த மூலிகை. இது முக்கியமாக தலைமுடி ஆரோக்கியம், சரும நோய்கள், மற்றும் விஷ முறிவு சிகிச்சையில் பயன்படுத்தப்படுகிறது. இயற்கையான கறுப்பு சாயம் (NATURAL DYE) தயாரிக்கவும், மலச்சிக்கல், வயிற்றுப் புழுக்களை நீக்கவும், வீக்கம் மற்றும் கட்டிகளைக் கரைக்கவும் இது பெரிதும் உதவுகிறது.

அவுரியின் முக்கிய பயன்கள்:

கூந்தல் பராமரிப்பு: நரை முடியை இயற்கையாகக் கறுப்பாக்க, மருதாணியுடன் கலந்து அவுரி இலைப்பொடி பயன்படுத்தப்படுகிறது. இது கூந்தலை அடர்த்தியாகவும், ஆரோக்கியமாகவும் வளரச் செய்கிறது.

சருமப் பாதுகாப்பு: அவுரி இலைச்சாறு சரும நோய்கள், தீக்காயங்கள், மற்றும் விஷப்பூச்சிகளால் ஏற்படும் வீக்கம், கட்டிகளைக் கரைக்கப் பயன்படுகிறது.

வயிற்று ஆரோக்கியம்: வயிற்றுப் புழுக்களை அழிக்கவும், மலச்சிக்கலைப் போக்கவும், குடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் உதவுகிறது.

விஷ முறிவு: பாம்பு உள்ளிட்ட விஷப்பூச்சிகளின் நச்சை முறிக்கும் ஆற்றல் இதற்கு உண்டு.

பெண் நலம்: முறையற்ற மாதவிடாய் பிரச்சினைகளுக்கு அவுரி இலைப்பொடி தேனில் கலந்து உட்கொள்ளப்படுகிறது.

பயன்படுத்தும் முறை:

தலைமுடிக்கு: அவுரி இலைப்பொடியை நீரில் அல்லது மருதாணி கலந்த கூந்தலில் பூசி, 45 நிமிடங்கள் முதல் 2 மணி நேரம் வரை ஊறவைத்து அலசலாம்.

மருந்தாக: இதன் இலைகள் மற்றும் வேர் மருத்துவ குணங்கள் கொண்டது, எனினும் நிபுணர் ஆலோசனையுடன் உட்கொள்வது சிறந்தது.

பொறுப்புத்துறப்பு: இந்தத் தகவல்கள் பொதுவான மருத்துவ குணங்களை அடிப்படையாகக் கொண்டவை. தீவிர உடல்நலப் பிரச்சினைகளுக்கு மருத்துவரை அணுகவும்.




# இணையத்தில் லீக்கான ஜனநாயகன்.. ரிலீஸ் தேதி குறித்து வெளிவந்த தகவல் விநியோகஸ்தர்கள் எடுத்த முடிவு

அரசியலில் களமிறங்கியுள்ள நடிகர் விஜய்யின் கடைசி படமாக கருதப்பட்டது ஜனநாயகன். ஜனவரி மாதம் இப்படம் வெளியாகவிருந்த நிலையில், சென்சார் கிடைக்காத காரணத்தினால் படத்தின் ரிலீஸ் தள்ளிக்கொண்டே போனது. இதன்பின் தேர்தலுக்கு பின், மே மாதம்தான் ஜனநாயகன் வெளிவரும் என கூறப்பட்டது.

இந்த நிலையில், திடீரென ஜனநாயகன் திரைப்படத்தை யாரோ இணையத்தில் கசிய விட்டுவிட்டனர். இதனால் தயாரிப்பாளருக்கு மிகப்பெரிய நஷ்டம் ஏற்படும் என தெரிகிறது.

இது மிகப்பெரிய பிரச்சனையாக உருவெடுத்துள்ள நிலையில், இதுவரை 6 பேர் கைதாகியுள்ளதாக தகவல் தெரிவிக்கின்றனர். மேலும், லோக்கல் கேபிள் சேனல் ஒன்றில் படத்தை ஒளிபரப்பினார்கள். அதற்கான நடவடிக்கையும் காவல் துறையினரால் எடுக்கப்பட்டது.

ஜனநாயகன் திரைப்படம் இணையத்தில் கசிந்துள்ள நிலையில், படத்திற்கான சென்சார் சான்றிதழை ஓரிரு நாட்களில் கொடுக்க சென்சார் போர்டு முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனால், ஜனநாயகன் படம் வருகிற ஏப்ரல் 30ஆம் தேதி திரையரங்குகளில் வெளிவர வாய்ப்புள்ளது என்கின்றனர்.


ஜனநாயகன் திரைப்படத்தை MG (Minimum Guarantee) அடிப்படையில் ரூ. 103 கோடிக்கு தமிழக விநியோகஸ்தர்கள் வாங்கியிருந்தார்கள். இதில் 50% சதவீத தொகை அட்வான்ஸாக ரிலீஸுக்கு மும்பே தயாரிப்பு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. ஆனால், படம் தற்போது லீக்காகிவிட்டதால், விநியோகஸ்தர்கள் தங்களது முடிவை மாற்றியுள்ளனர்.



அசத்தலான மாடர்ன் லுக்கில் எடுத்துக்கொண்ட போட்டோஷூட் புகைப்படங்களை இன்ஸ்டாவில் பதிவிட்டுள்ளார். இதோ அந்த புகைப்படங்கள்:

# இனி மலையாளத்திலும் யுவன் ராஜ்யம் தான்... வெளியானது புதிய படத்தின் லேட்டஸ்ட் அப்டேட்.!





நடிகர் ஜோஜு ஜார்ஜ் இயக்கி, தயாரிக்கும் புதிய மலையாள திரைப்படமான 'PARIPADI' தற்போது பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த படத்தின் மூலம் பிரபல இசையமைப்பாளர் யுவன் ஷங்கர் ராஜா மலையாள சினிமாவில் அறிமுகமாகிறார் என்பது ரசிகர்களிடையே அதிக கவனம் பெற்ற செய்தியாக மாறியுள்ளது.

தமிழ் சினிமாவில் பல வெற்றி படங்களுக்கு இசையமைத்து தனக்கென ஒரு ஸ்டைலை உருவாக்கிய யுவன், தற்போது மலையாளத் திரையுலகில் காலடி எடுத்து வைப்பது ஒரு முக்கியமான கட்டமாக பார்க்கப்படுகிறது. அவரது இசை இந்த ஆக்ஷன் த்ரில்லர் படத்திற்கு புதிய அனுபவத்தை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த திரைப்படத்தை காவ்யா பிலிம்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. அதிரடி காட்சிகளுக்கு பெயர் பெற்ற அன்பறிவ் ஸ்டண்ட் இயக்குநராக இணைந்துள்ளதால், படத்தில் அதிரடி காட்சிகள் முக்கிய அம்சமாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

இப்படம் மூலம் ஜோஜு ஜார்ஜ் இயக்குநராக தனது திறமையை நிரூபிக்க முயற்சிக்கிறார். அதேசமயம், யுவன் ஷங்கர் ராஜாவின் இசை மற்றும் அனுபவம் படத்தின் எதிர்பார்ப்பை மேலும் உயர்த்தியுள்ளது. இந்த புதிய கூட்டணி மலையாள சினிமாவில் ஒரு தனித்துவமான படைப்பை உருவாக்கும் என ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

# மகாபாரதம்...



"நல்லதற்கு நல்லது; தீயதுக்கு தீயது" — கர்ணன் & கண்ணன் உரையாடலில் மறைந்த கீதையின் ஆழமான உண்மை!

மகாபாரதம்...
ஒரு போர்கதை மட்டுமல்ல...
மனித வாழ்க்கையின் சிக்கல்களையும், நியாயம் அநியாயம் ஆகியவற்றின் போராட்டத்தையும் வெளிப்படுத்தும் ஆன்மீகப் பெருங்கடல்!
அந்தக் கதையில் மிக ஆழமான உணர்வுகளை தாங்கிய ஒரு தருணம் —
கர்ணன் மற்றும் கிருஷ்ணர் இடையேயான உரையாடல்.
கர்ணனின் வேதனை — நியாயம் தேடும் மனம்

ஒரு நாள், மனதில் பொங்கிய வேதனையுடன் கர்ணன், கண்ணனை நோக்கி பேசத் தொடங்குகிறான்:
"உலக நாயகனே...
என் வாழ்க்கையை நீ அறியவில்லையா?"
அவன் சொற்கள் — கண்ணீரின் சத்தம்...

"நான் பிறந்த அந்த நொடியே என் தாய் குந்தி என்னை கைவிட்டாள்...
நான் அனாதையாகி விட்டேன்...
இது என் தவறா?"

"நான் குரு துரோணாச்சாரியரிடம் கற்றுக்கொள்ளச் சென்றேன்...
'நீ க்ஷத்ரியன் இல்லை' என்று என்னை நிராகரித்தார்..."
"பிறகு பரசுராமர் என்னை ஆசீர்வதித்து கற்றுக் கொடுத்தார்...
ஆனால் உண்மை தெரிந்ததும், நான் கற்ற அனைத்தும் மறந்து போகச் சாபம் அளித்தார்..."
"ஒரு நாள் தவறுதலாக என் அம்பு ஒரு பசுவைத் தாக்கியது...
அதற்காகவும் சாபம்!"
"திரௌபதியின் சுயம்வரத்தில் என்னை அவமானப்படுத்தினர்..."

"இறுதியாக... என் தாய் என்னை மகனாக ஏற்றுக் கொண்டதும் கூட —
அவள் மற்ற மகன்களை காப்பாற்றுவதற்காகத்தான்!"

நட்பின் கடமை — கர்ணனின் நிலை
அவன் குரல் இன்னும் உறுதியடைகிறது...
"என் வாழ்க்கையில் ஒளி கொண்டு வந்தவன் — துரியோதனன்!
அவன் இல்லையென்றால் நான் எதுவும் இல்லை!"
"அப்படியிருக்கையில், நான் அவன் பக்கம் நிற்பது தவறா?"
"செய்நன்றி மறப்பது பெரிய பாவம் அல்லவா கண்ணா?"
கர்ணன் — தனது வேதனையை மட்டும் அல்ல...
தன் நியாயத்தையும் வெளிப்படுத்துகிறான்.
கண்ணனின் அமைதி — உண்மையின் குரல்
எல்லாவற்றையும் அமைதியாகக் கேட்ட கண்ணன், மெதுவாகப் பேசத் தொடங்கினார்:
"கர்ணா...
நீ உன் கதையைச் சொன்னாய்...
என் கதையையும் கேட்க விரும்புகிறாயா?"
கண்ணனின் வாழ்க்கை — மறைக்கப்பட்ட சோதனைகள்

"நீ அரண்மனையில் பிறந்தாய்...
நான் பிறந்தது சிறையில்..."
"நான் பிறக்கும் முன்பே... என் மரணம் எனக்காக காத்திருந்தது..."
"பிறந்த உடனே, என் பெற்றோரிடமிருந்து பிரிக்கப்பட்டேன்..."

"நீ வீரர்களின் நடுவில் வளர்ந்தாய்...
நான் வளர்ந்தது மாட்டுக் கொட்டகையில்..."
"என்னை கொல்ல எண்ணற்ற சதிகள் நடந்தன..."

"எனக்கு கல்வி வாய்ப்பு இல்லை...
பின்னர் தான் கற்றுக் கொள்ள முடிந்தது..."
"என் மக்களை காப்பாற்ற நான் நகரத்தை மாற்றினேன்...
ஆனால் எனக்கு கிடைத்த பெயர் — 'பயந்தோடி'!"
வாழ்க்கையின் உண்மை — கண்ணனின் போதனை
பிறகு கண்ணன் ஆழமாகக் கூறுகிறார்:
"கர்ணா...
வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் சவால்கள் இருக்கின்றன..."

"நீ சந்தித்த கஷ்டங்கள்...
நீ தவறான வழியில் செல்ல உரிமை அல்ல!"
"துரியோதனன் தவறு செய்கிறான்...
தருமன் நியாயம் செய்கிறான்...
இதெல்லாம் உனக்குத் தெரியும்..."

"நாம் எவ்வளவு இழந்தோம் என்பது முக்கியமல்ல...
நாம் எப்படி நடந்துகொண்டோம் என்பதே முக்கியம்!"
"வாழ்க்கை கடினமானது...
ஆனால் அழகானதும் கூட!"
கீதையின் சாரம்
இந்த உரையாடல் நமக்கு சொல்லும் மிகப் பெரிய உண்மை:
நமக்கு நடந்த அநீதிகள்...
நம்மை தவறான பாதையில் செல்ல வைக்கும் காரணம் ஆகக் கூடாது

நம்முடைய முடிவுகள்...
நம்முடைய அணுகுமுறை...
நம்முடைய நியாயம்...
அதுவே நம் விதியை நிர்ணயிக்கும்!
இறுதி உணர்வு
நல்லதற்கு நல்லது...
தீயதுக்கு தீயது...
நாம் நல்லதை தேர்ந்தெடுத்தால் —
வாழ்க்கையும் நமக்கு நல்லதையே தரும்!

-பாலசந்தர்
மண்ணச்சநல்லூர்

தினம் ஒரு தலைவர்கள்

# தில்லையாடி வள்ளியம்மை வரலாறு

தில்லையாடி வள்ளியம்மை (22 பெப்ரவரி 1898 - 22 பெப்ரவரி 1914) தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த இந்தியர்களின் உரிமைக்கான போராட்டத்தில் ஈடுபட்டு தன் பதினாறாவது வயதில் உயிர்நீத்த ஒரு தமிழ்ப் பெண் போராளி ஆவார். இவர் ஆரம்ப காலத்தில் மகாத்மா காந்தியுடன் இணைந்து அறப் போராட்டங்களில் கலந்து கொண்டு பின்னர் அந்நாட்டின் இனவொதுக்கல் அரசுக்கு எதிராகப் போராடினார்.
சிறுமி தில்லையாடி வள்ளியம்மை தான் எனக்கு முதன்முதலில் விடுதலை உணர்வை ஊட்டிய பெருமைக்குரியவர் என்று காந்தியடிகள் சொன்னார்.



வாழ்க்கை வரலாறு
தில்லையாடி வள்ளியம்மை தென்னாப்பிரிக்காவில் 1898ஆம் ஆண்டில் ஓர் செங்குந்தர் குடும்பத்தில் பிறந்தார். இவர் மயிலாடுதுறை மாவட்டம், தில்லையாடி என்ற ஊரைச் சார்ந்த முனுசாமி முதலியார், மங்களத்தம்மாள் ஆகியோருக்குப் பிறந்தவர். நெசவுத் தொழிலாளியான முனுசாமி முதலியார் பிரித்தானிய ஆட்சியில் தென்னாப்பிரிக்காவுக்குச் சென்று அங்கு ஜோகானஸ்பேர்க் நகரில் ஒரு சிறிய வணிகத்தைத் தொடங்கினார். அங்கு தான் வள்ளியம்மை பிறந்தார்.

தில்லையாடி காந்தி நினைவுத் தூண்
கிறித்தவ தேவாலயத்தில் தான் திருமணங்கள் நடத்தப்படவேண்டும் என்றும் அதன் படி நடைபெறாத திருமணங்கள் செல்லாது என்றும் தென்னாப்பிரிக்க ஆங்கிலேய அரசு தெரிவித்தது. அப்போது தென்னாப்பிரிக்காவில் வழக்கறிஞராகப் பணியாற்றிக் கொண்டிருந்த மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியின் முன்னெடுப்பில் அங்கிருந்த இந்தியர்கள் போராட்டம் நடத்தினர். மேலும் தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த இந்தியர்களுக்கு தென்னாப்பிரிக்க அரசால் விதிக்கப்பட்ட வரியை எதிர்த்தும் போராட்டங்கள் நடந்தன. அவற்றில் பங்குபெற்று அறவழியில் போராடினார் தில்லையாடி வள்ளியம்மை. அதற்காக 1913ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சிறையில் அடைக்கப்பட்ட அவர் உடல் நலக்குறைவால் விடுதலை செய்யப்பட்டபோதும் போராட்டக் குழுவினரின் கோரிக்கை நிறைவேறாததால் வெளியே வர மறுத்தார். பின்னர் இந்தியர்களுக்கு விதிக்கப்பட்ட தலைவரி நீக்கப்பட்ட பின்பே தம் விடுதலையை ஏற்று வெளியே வந்தார் வள்ளியம்மை. பதினாறு ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்த அவரை "பலன் ஏதும் கருதாமல் தென்னாப்பிரிக்காவில் தியாகம் செய்து வெற்றி கண்ட தில்லையாடி வள்ளியம்மை அவர்கள் தாம் எனக்கு முதன் முதலில் விடுதலை உணர்வை ஊட்டிய பெருமைக்குரியவர்" என காந்தி பாராட்டியுள்ளார்.






நினைவு மண்டபம்

தில்லையாடியில் உள்ள வள்ளியம்மை நினைவு மண்டபம்
தமிழ்நாடு அரசு தில்லையாடி வள்ளியம்மையின் ஈகத்தைப் போற்றும் வகையில் முந்தைய தஞ்சாவூர் மாவட்டத்தில் [மயிலாடுதுறை] அருகில் தில்லையாடியில் பிறந்தார்.மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி வட்டம் தில்லையாடியில் நினைவு மண்டபம் அமைத்துள்ளது.

காந்தி தில்லையாடிக்கு 01/05/1915 அன்று வருகை தந்து அமர்ந்த இடத்தில் இந்த நினைவுத் தூண் கட்டப்பட்டுள்ளது. அதன் எதிரில் 'தில்லையாடி வள்ளியம்மை நினைவுமண்டபம்' கட்டப்பட்டுள்ளது.

இங்கு தில்லையாடி வள்ளியம்மையின் சிலை ஒன்று முன்மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு பொது நூலகத்துறை மூலம் ஒரு நூலகம் செயல்பட்டு வருகின்றது.

நூற்றாண்டு நினைவு தரங்கம்பாடி மற்றும் தில்லையாடிக்குச் செல்வதற்காக காந்தி தம் மனைவி கஸ்தூரிபாயுடன் 1915 ஏப்ரல் 29ஆம் தேதி இரவு தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் ரயிலில் மயிலாடுதுறைக்கு வந்து, மறுநாள் அங்கிருந்து இரட்டைக் குதிரைகள் பூட்டிய சாரட் வண்டியில் தரங்கம்பாடி வந்தடைந்தார். தரங்கம்பாடி டேனிஷ் கோட்டை மைதானத்தில் அவருக்கு சத்தியாகிரகவாதிகளும் பொதுமக்களும் வரவேற்பு அளித்தனர். மே 1ஆம் தேதி தரங்கம்பாடியிலிருந்து தில்லையாடிக்கு சென்றார் காந்தி.

தில்லையாடி பகுதியை சேர்ந்த பலரும் தென்னாப்பிரிக்காவில் காந்தியுடன் அறப்போராட்டத்தில் பங்கேற்றிருந்தனர். தில்லையாடியில் காந்தி அமர்ந்து பொதுமக்களிடம் பேசிய இடத்தில் நினைவுத் தூண் அமைக்கப்பட்டுள்ளது. காந்தி தில்லையாடிக்கு வந்ததன் நூற்றாண்டு நினைவு விழா தில்லையாடி தியாகி வள்ளியம்மை நினைவு மண்டபத்தில் 01/05/2015 அன்று நடைபெற்றது.

தில்லையாடியில் 'காந்தி நினைவுத் தூண்' அருகில் தற்போது அமைக்கப்பட்டுள்ள நூற்றாண்டு நினைவுக் கல்வெட்டு திருப்பணந்தாள் காசிமட இணை அதிபரால் திறந்துவைக்கப்பட்டது.

# திமுக எம்பிக்களின் கருப்பு சட்டை எதிர்ப்பு: பிரதமர் மோடி விமர்சனம்



**புதுடெல்லி, ஏப்.18:**

தொகுதி வரையறை மசோதாக்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து திமுக எம்பிக்கள் மக்களவைக்கு நேற்று கருப்பு சட்டை அணிந்து வந்திருந்தனர்.

இதுதொடர்பாக பிரதமர் நரேந்திர மோடி கூறியதாவது: நல்ல விஷயங்கள் நடக்கும் போது தீய சக்திகளில் இருந்து நம்மை பாதுகாத்து கொள்ள கண் திருஷ்டிக்காக கருப்பு பொட்டு வைப்பது வழக்கம். தற்போது மகளிர் இடஒதுக்கீடு மசோதாக்கள் மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டு உள்ளன.

இந்த நல்ல நேரத்தில் மசோதாக்கள் மீதான கண் திருஷ்டியை போக்கும் வகையில் எதிர்க்கட்சி (திமுக) எம்பிக்கள் கருப்பு சட்டை அணிந்து வந்துள்ளனர்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# இந்தியா-நியூஸிலாந்து இடையே ஏப். 27-இல் தடையற்ற வார்த்தக ஒப்பந்தம்

**புதுடெல்லி, ஏப்.18:**

இந்தியா-நியூஸிலாந்து இடையே தில்லியில் வரும் 27-ஆம் தேதி தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையொப்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதன் மூலம் நியூஸிலாந்துக்கு இந்தியப் பொருள்கள் வரியின்றி ஏற்றுமதி செய்யப்படுவதுடன், அடுத்த 15 ஆண்டுகளில் அந்நாட்டில் இருந்து ரூ.1.86 லட்சம் கோடிக்கு மேல் முதலீடு ஈர்க்கப்படவுள்ளது.

டில்லி பாரத மண்டபத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் இருதரப்பு தலைவர்கள் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட உள்ளனர். தடையற்ற வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தை நிறைவடைந்து ஒப்பந்தம் இறுதிசெய்யப்பட்டுள்ளதாக இரு நாடுகளும் கடந்த டிசம்பர் 22-இல் அறிவித்தன. நியூஸிலாந்தில் இருந்து கம்பளி, நிலக்கரி, மரம், ஒயின், அவகாடோ பழம், புளூபெரி உள்ளிட்டவை இந்தியாவுக்கு 95 சதவீதம் வரை வரி விலக்குடன் இறக்குமதி செய்யப்படும்.

அதே நேரத்தில் பால் மற்றும் பல்வேறு வகை பால் பொருள்கள், வெங்காயம், சர்க்கரை, நறுமணப் பொருள்கள், உணவுப் பயன்பாட்டு எண்ணெய், ரப்பர் ஆகியவற்றுக்கு வரிச் சலுகை கிடையாது. உள்நாட்டு விவசாயிகளைப் பாதுகாக்கும் நோக்கில் இந்தியா இந்தக் கட்டுப்பாடு விதித்துள்ளது.

இதுதவிர ஆண்டுதோறும் 5,000 இந்தியர்களுக்கு தற்காலிக வேலைவாய்ப்பு விசாவை நியூஸிலாந்து வழங்கவுள்ளது. மருத்துவர்கள், பொறியாளர்கள், திறன்மிக்க பணியாளர்கள் இந்த விசா மூலம் அந்நாட்டுக்கு பணிக்குச் செல்வார்கள். 3 ஆண்டுகள் வரை அந்நாட்டில் தங்கிப் பணியாற்ற முடியும்.

# வாக்களிப்பதை கட்டாயமாக்க முடியாது: பொது நல மனுவை நிராகரித்தது உச்சநீதிமன்றம்



**புதுடெல்லி, ஏப்.18:**

தேர்தல்களில் வாக்களிப்பதை கட்டாயமாக்கக் கோரி தாக்கல் செய்த பொதுநல மனுவை விசாரணைக்கு ஏற்க உச்சநீதிமன்றம் வியாழக்கிழமை மறுத்தது.

அஜய் கோயல் என்பவர் சார்பில் இந்தப் பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில், 'வாக்களிப்பதை கட்டாயமாக்க வேண்டும். வேண்டுமென்றே வாக்களிக்காமல் இருப்பவர்களுக்கு அரசு நலத் திட்டங்களைப் பெறுவதிலிருந்து தடை விதிக்கும் வகையில் வழிகாட்டுதலை வெளியிட தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும்' எனக் கோரியிருந்தார். இந்த மனு உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்ய காந்த், நீதிபதிகள் ஜயமால்ய பாக்சி, விபுல் எம். பஞ்சோலி ஆகியோர் அடங்கிய அமர்வில் வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது. மனுவைப் பரிசீலித்த தலைமை நீதிபதி சூர்ய காந்த், 'சட்ட ரீதியிலான நிர்ப்பந்தத்தைக் காட்டிலும், பொது விழிப்புணர்வில்தான் ஜனநாயகம் செழித்து வளர முடியும். சட்டத்தின் ஆட்சியால் ஆளப்படும், ஜனநாயகத்தில் நம்பிக்கைகொண்ட இந்த நாட்டில், அனைவரும் சென்று வாக்களிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். அவர்கள் வாக்களிக்கச் செல்லவில்லை என்றால், அவர்களைக் கட்டாயப்படுத்த முடியாது. தேவைப்படுவது விழிப்புணர்வுதான். அதோடு, தேர்தல் நாளில் நீதிபதிகள் உள்பட பல குடிமக்களும் பணிபுரிய வேண்டிய அவசியம் உள்ள நிலையில், வாக்களிப்பதை கட்டாயமாக்கும் சட்டம் கொண்டுவருவது என்பது நடைமுறையில் சாத்தியமில்லாதது. எனவே, மனுதாரர் மத்திய அரசை அணுகி தனது கோரிக்கைக்குத் தீர்வு காணலாம்' என்று குறிப்பிட்டு, மனுவை விசாரணைக்கு ஏற்க மறுத்து உத்தரவிட்டார்.

# தேர்தல் நடத்தை விதி மீறல்: நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை பதவி நீக்க மம்தா வலியுறுத்தல்

**கொல்கத்தா, ஏப்.18:**

தேர்தல் நடத்தை விதிகளை மீறி மேற்கு வங்கத்தில் பெண்களுக்கு ரூ.3,000 தருவதாக அட்டைகளை விநியோகித்த மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை பதவி நீக்க வேண்டும் என்று மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி வலியுறுத்தியுள்ளார்.

மேற்கு வங்கத்தில் பிரசாரம் மேற்கொண்ட நிர்மலா சீதாராமன், தேர்தலில் வென்றால் பெண்கள் வங்கிக் கணக்கில் மாதம்தோறும் ரூ.3,000 செலுத்தப்படும் என்ற பாஜகவின் முக்கிய வாக்குறுதி தொடர்பான அட்டைகளை பெண்களுக்கு விநியோகித்தார். அதில், பெண்கள் வங்கிக் கணக்கில் ரூ.3,000 செலுத்தப்படும் என்ற வாசகம் இடம்பெற்றிருந்தது.

இந்நிலையில், மேற்கு வங்கத்தின் அலிபூர்துவாரில் தேர்தல் பொதுக்கூட்டத்தில் பங்கேற்ற மம்தா இது தொடர்பாக பேசியதாவது:



உத்தர பிரதேசம், ராஜஸ்தான், அஸ்ஸாம் உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் இப்போது மேற்கு வங்கத்துக்கு வந்து விடுதிகளிலும், விருந்தினர் இல்லங்களிலும் தங்கியுள்ளனர். இவர்களின் பணி வாக்காளர்களைச் சந்தித்து பாஜகவுக்கு ஆதரவாக வாக்களிக்க பணம் விநியோகிப்பதாகும்.

மகளிர் இடஒதுக்கீடு என்ற பெயரில் தொகுதி மறுசீரமைப்பு செய்து வாக்காளர் பட்டியலில் இருந்து மேலும் பலரின் பெயர்களை நீக்க சதி நடந்து வருகிறது. இதைத் தொடர்ந்து தேசிய குடிமக்கள் பதிவேட்டையும் அமல்படுத்துவார்கள்.

மகளிர் இடஒதுக்கீடு மசோதா எப்போதோ நிறைவேற்றப்பட்டுவிட்டது. அதை அமல்படுத்தாமல் இருந்தது மத்திய அரசுதான். இப்போது வேறு நோக்கத்துக்காக மகளிர் இடஒதுக்கீடு என்ற பெயரில் மத்திய அரசு சதி செய்கிறது.

தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருக்கும் நேரத்தில் ரூ.3,000 தருவதாகக் கூறி அட்டைகளை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வழங்கியுள்ளார். இது வாக்காளர்களை தவறாக வழிநடத்தும் செயல். தேர்தல் ஆணையம் இதில் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?. பாஜகவுக்கு எதிராக எங்கள் கட்சியினர் அளிக்கும் அனைத்துப் புகார்களையும் புறக்கணிப்பதைப்போல இந்த விஷயத்திலும் நடந்து கொள்ளப் போகிறதா?

தேர்தல் விதிகளை மீறிச் செயல்பட்ட நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை பிரதமர் நரேந்திர மோடி பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்றார்.

# ராகிங் கொடுமையால் மாணவர் தற்கொலை: அரசு மருத்துவக்கல்லூரி பேராசிரியர் பணி நீக்கம்

**திருவனந்தபுரம், ஏப்.18:**

கேரளம் மாநிலம் திருவனந்தபுரம் மாவட்டம் நெடுமங்காடு பகுதியை சேர்ந்தவர் நித்தின் ராஜ் (வயது 23). இவர் கண்ணூர் மாவட்டம் அஞ்சரகண்டி அரசு மருத்துவக்கல்லூரியில் பி.டி.எஸ். (பல் மருத்துவம்) படித்து வந்தார். அவரை கல்லூரி அனாடமி பாடப்பிரிவு பேராசிரியர்கள் 2 பேர், முதுநிலை மாணவர்கள் சிலர் ராகிங் செய்ததோடு, சாதி, மதத்தின் பெயரால் இழிவுபடுத்தி உள்ளனர். மேலும் அவரது நிறம் குறித்து கிண்டல் செய்ததோடு, மாணவரின் வறுமை நிலையை சுட்டிக்காட்டி கேலி செய்ததாக தெரிகிறது.

இதனால் மனமுடைந்த நித்தின் ராஜ் கல்லூரி கட்டிடத்தின் 4-வது மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டார். தற்கொலை செய்வதற்கு முன்பு நித்தின் ராஜ் சமூக வலைத்தளத்தில் ஆடியோ வெளியிட்டு இருந்ததாக தெரிகிறது. அதில், அனாடமி பிரிவு பேராசிரியர்கள் ராம், சங்கீதா ஆகியோர் ராகிங் செய்ததாக குறிப்பிட்டு இருந்தார். இந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது. இதுதொடர்பாக கல்லூரி நிர்வாகம் விசாரணை நடத்தினர். இதைத்தொடர்ந்து பேராசிரியர்கள் ராம், சங்கீதா ஆகிய 2 பேரும் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர். மேலும் சக்கரக்கல் போலீசார், பேராசிரியர்கள் 2 பேர் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. இதற்கிடையே மருத்துவ மாணவர் தற்கொலை வழக்கில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேரளம் மாநில கவர்னரும், பல்கலைக்கழக வேந்தருமான ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் உத்தரவிட்டு இருந்தார். அதன்படி குழு அமைத்து, கல்லூரியில் 300-க்கும் மேற்பட்ட மாணவர்களிடம் வாக்குமூலம் பெறப்பட்டது.

அப்போது மாணவர் தற்கொலைக்கு பேராசிரியர் ராமின் ராகிங் கொடுமையே காரணம். அவரை பணியில் இருந்து நீக்க வேண்டும் என்று கூறியதாக தெரிகிறது. மேலும் அவர் தலைமறைவாகி விட்டார். இந்த நிலையில் பேராசிரியர் ராம் பணி நீக்கம் செய்யப்பட்டு உள்ளார். அவரை போலீசார் தேடி வருகின்றனர்.

# அனில் அம்பானி மனு சுப்ரீம் கோர்ட்டில் தள்ளுபடி



**புதுடெல்லி, ஏப்.18:**


பிரபல தொழில் அதிபர் அனில் அம்பானி மற்றும் அவரது ரிலையன்ஸ் கம்யூனிகேசன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான வங்கிக் கணக்குகளை 'மோசடி கணக்குகள்' என்று ஏன் அறிவிக்கக்கூடாது என்று கேட்டு 3 பொதுத்துறை வங்கிகள் நோட்டீஸ் அனுப்பின.

அதை எதிர்த்து அனில் அம்பானி, மும்பை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். அதை விசாரித்த ஒற்றை நீதிபதி, வங்கிகள் நடவடிக்கை எடுக்க தடை விதித்து இடைக்கால உத்தரவு பிறப்பித்தார். அந்த உத்தரவை 2 நீதிபதிகள் அமர்வு ரத்து செய்தது. அதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் அனில் அம்பானி 3 மனுக்களை தாக்கல் செய்தார்.

இந்த மனுக்களை தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு நேற்று விசாரித்து 3 மனுக்களையும் தள்ளுபடி செய்தது.

அதே சமயத்தில், அனில் அம்பானி மும்பை ஐகோர்ட்டின் ஒற்றை நீதிபதி முன்பு தனது கோரிக்கையை விடுக்க அனுமதி அளித்தது. அந்த கோரிக்கையை விரைந்து விசாரித்து முடிக்கு மாறு ஒற்றை நீதிபதியை சுப்ரீம் கோர்ட்டு கேட்டுக்கொண்டது.

# டில்லி விமான நிலையத்தில் மோதிக்கொண்ட ஆகாசா ஏர், ஸ்பைஸ்ஜெட் விமானங்கள்: டிஜிசிஏ விசாரணை




**புதுடெல்லி, ஏப்.18:**

டில்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் வியாழக்கிழமை பிற்பகலில் ஆகாசா ஏர் மற்றும் ஸ்பைஸ்ஜெட் நிறுவனங்களுக்குச் சொந்தமான இரண்டு போயிங் 737 விமானங்கள் ஒன்றோடு ஒன்று மோதிக்கொண்டதில் சேதமடைந்தன. இது தொடர்பாக இந்திய விமானப் போக்குவரத்து ஒழுங்குமுறை ஆணையம் (டிஜிசிஏ) விசாரணை நடத்தி வருகிறது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆகாசா ஏர் நிறுவனம் கூறுகையில், 'விமான நிலையத்தின் முனையம் 1-இல் பிற்பகல் 2:15 மணியளவில் இந்தச் சம்பவம் நிகழ்ந்தது. அப்போது, ஆகாசா ஏர் நிறுவனத்தின் க்யூபி 1406 விமானம் தில்லியிலிருந்து ஹைதராபாத் புறப்பட நின்றுகொண்டிருந்தது. லடாக்கின் லே பகுதியில் இருந்து தில்லி வந்து தரையிறங்கிய ஸ்பைஸ்ஜெட் நிறுவனத்தின் எஸ்ஜி 124 விமானம், விமானம் நிறுத்தும் இடத்திற்குச் சென்றபோது ஆகாசா விமானம் மீது மோதியது. இதையடுத்து, பயணிகள் மற்றும் குழுவினர் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்' எனத் தெரிவித்தது.

இது தொடர்பாக டிஜிசிஏ வெளியிட்ட அறிக்கையில், 'விமானம் நிறுத்தும் இடத்துக்குச் சென்றுகொண்டிருந்த ஸ்பைஸ்ஜெட் விமானத்தின் வலது இறக்கையின் முனை ஆகாசா ஏர் விமானத்தின் பின்புற கிடைமட்ட வால் பகுதியில் மோதியது. இதன் காரணமாக இரு விமானங்களிலும் சேதம் ஏற்பட்டது. இதில் பயணிகள் மற்றும் குழுவினர் யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. சம்பவம் தொடர்பாக விசாரணை நடைபெற்று வருகிறது' என தெரிவிக்கப்பட்டது.

# 'சாணக்கியரே அதிர்ச்சி அடைந்திருப்பார்..' -பிரியங்கா காந்தி

**புதுடெல்லி, ஏப்.18:**

நாடாளுமன்றத்தின் 3 நாள் சிறப்பு கூட்டத்தொடர் இன்று காலை தொடங்கியது. இந்த சிறப்பு கூட்டத்தொடரில், மகளிர் இடஒதுக்கீடு சீர்திருத்த மசோதா தாக்கல் செய்யப்பட்டு, அதில் 2 பெரிய சீர்த்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதுடன், அரசியலமைப்பு சட்டம் 131-வது திருத்த மசோதா-2026, தொகுதிகள் மறுவரையறை மசோதா-2026 மற்றும் யூனியன் பிரதேசங்களின் சட்டங்கள் திருத்த மசோதா-2026 ஆகிய 3 மசோதாக்கள் இன்று மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டு விவாதம்



நடத்தப்பட்டது.

இன்றைய விவாதத்தின்போது பிரியங்கா காந்தி பேசுகையில், "மகளிர் இடஒதுக்கீட்டை காங்கிரஸ் ஆதரித்தாலும், இன்றைய விவாதம் அதைப்பற்றியது அல்ல, மாறாக அந்த மசோதாவிற்கு பின்னால் இருக்கும் அரசியல் நோக்கம் பற்றியது. மகளிருக்கான இடஒதுக்கீடு என்பது, உண்மையில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் அரசியல் துருப்புச்சீட்டு ஆகும். இந்திய அரசியலமைப்பை சிதைப்பதன் மூலம் பா.ஜ.க. தனதுகட்சியின் அடித்தளத்தை வலுப்படுத்துகிறது.

நீங்கள் அனைவரும் முழுமையாகத் திட்டமிட்டு வந்துள்ளீர்கள். இன்று சாணக்கியர் உயிரோடு இருந்திருந்தால், உங்கள் தந்திரத்தைக் கண்டு அவரே அதிர்ச்சி அடைந்திருப்பார்" என்று கூறினார். சாணக்கியர் குறித்து பிரியங்கா காந்தி பேசியதைக் கேட்டு அவையில் சிரிப்பலை எழுந்தது.

# போர் விமானங்களுக்கு வானிலேயே எரிபொருள்: அமெரிக்க நிறுவனத்துடன் மும்பை நிறுவனம் ஒப்பந்தம்



**புதுடெல்லி, ஏப்.18:**

இந்திய பாதுகாப்புப் படைகளுக்கு சேவையளிக்கவும், போர் விமானங்களுக்கு வானிலேயே எரிபொருள் நிரப்பும் தொழிநுட்பத்தை அறிமுகம் செய்யவும் இந்தியாவின் முன்னணி பாதுகாப்பு மற்றும் விண்வெளி பொறியியல் நிறுவனம் அமெரிக்க நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: மும்பையைச் சேர்ந்த பாராஸ் பாதுகாப்பு மற்றும் விண்வெளி தொழில்நுட்ப நிறுவனத்துக்கும் அமெரிக்காவைச் சேர்ந்த பண்டக் விமான தொழில்நுட்ப டிபிஏ நார்த்ஸ்டார் நிறுவனத்துக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பம் கையொப்பமாகியுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின்படி, போர் விமானங்களுக்கு வானிலேயே எரிபொருள் நிரப்புவதற்கான தொழில்நுட்பம் உள்பட நவீன தொழில்நுட்பம் மற்றும் உபகரணங்களை அமெரிக்க நிறுவனம் விநியோகிப்பதோடு, தொழில்நுட்ப ஆதரவையும் வழங்கும்.

விமானங்களுக்கு வானிலேயே எரிபொருள் நிரப்பும் தொழில்நுட்பத்தை வடிவமைத்தல், மேம்படுத்துதல் மற்றும் உற்பத்தி செய்வதில் உலக அளவில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான அமெரிக்காவின் நார்த்ஸ்டார் திகழ்கிறது என்று தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து பாராஸ் நிறுவன இயக்குநர் அமித் மஹாஜன் கூறுகையில்,

'இந்திய பாதுகாப்புப் படைகளுக்கு சேவையளிக்கும் நோக்கில், வானிலேயே எரிபொருள் நிரப்பும் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்த இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம், இத்தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்யும் முதல் நிறுவனமாக பாராஸ் திகழும்' என்றார்.

# திருப்பதி கலப்பட லட்டு குறித்து 7-ம் வகுப்பு தேர்வில் கேள்வி



**திருப்பதி, ஏப்.18:**

திருப்பதி ஏழுமலையான் கோயிலில் கடந்த ஜெகன்மோகன் ரெட்டி ஆட்சியின் போது, கலப்பட நெய் வாங்கப்பட்டதாக தற்போதைய ஆந்திர முதல்வர் சந்திர பாபு நாயுடு அறிவித்ததை தொடர்ந்து இந்த விவகாரம் பக்தர்களிடையே பேரதிர்வை ஏற்படுத்தியது.

இதுதொடர்பாக சிபிஐ விசாரணைக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனை தொடர்ந்து சிபிஐ அதிகாரிகள் திருப்பதி மற்றும் திருமலையில் ஆய்வு நடத்தி சிலரை கைதும் செய்தனர். இந்நிலையில் சமீபத்தில் ஆந்திராவில் நடைபெற்ற 7ம் வகுப்பு சமூக அறிவியல் தேர்வில், திருப்பதி கலப்பட லட்டு பிரசாதம் குறித்து 10-வது கேள்வியாக கேட்கப்பட்டுள்ளது.

அதாவது "திருப்பதி லட்டு பிரசாதத்தில் கலப்படம் நடந்தது குறித்து முழு விசாரணை தேவையா?" எனக் கேட்டு, ஒரு வரியில் பதிலளிக்கும்படி கூறப்பட்டுள்ளது. இதற்கு பல மாணவர்கள் லட்டு பிரசாதத்தில் கலப்படம் நடந்ததாகவும், இது குறித்து முழு விசாரணை நடத்தி உண்மையை தெரியப்படுத்த வேண்டுமெனவும் பதில் அளித்துள்ளதாக கூறப்படுகிறது.




## மீஞ்சூரில் செயின் பறிப்பை தடுத்த கல்லூரி மாணவியை வெட்டிய 4 பேர் கைது



**பொன்னேரி, ஏப்.18:** மீஞ்சூர் அருகே வல்லூர் ஊராட்சி, வாலாஜா தெருவை சேர்நத முகமது அஸ்கர் என்பவரின் மகள் சவுமிய பாத்திமா (17). இவர், சென்னையில் ஒரு கல்லூரியில் 2ம் ஆண்டு பி.காம் படித்து வருகிறார். இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு தனது வீட்டில் தேர்வுக்காக கல்லூரி மாணவி சவுமிய பாத்திமா படித்து கொண்டிருந்தார். அப்போது அவரது வீட்டுக்குள் 4 பேர் கஞ்சா போதையில் அத்துமீறி புகுந்தனர். கல்லூரி மாணவியை 4 போதை ஆசாமிகளும், மீன் வெட்டும் கத்தியால் சரமாரி வெட்டிவிட்டு தப்பியோடி விட்டனர். இதனால் அவருக்கு பல்வேறு இடங்களில் பலத்த வெட்டு விழுந்தது.

அவரை அங்குள்ள தனியார் மருத்துவமனையில் அக்கம்பக்கத்தினர் சேர்த்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தப்பியோடிய 4 பேரில் ஒருவரை மடக்கி பிடித்து, மீஞ்சூர் காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். இதுகுறித்து மீஞ்சூ ர் போலீசார் வழக்குப்பதிவு செய்து, அப்குதி சிசிடிவி காமிரா பதிவுகளை ஆய்வு செய்து, கல்லூரி மாணவியை வெட்டிவிட்டு தப்பியோடிய 3 போதை ஆசாமிகள் குறித்து தீவிரமாக விசாரித்தனர். மேலும், பிடிபட்ட போதை ஆசாமியிடம் போலீசார் விசாரித்தபோது, அவர் வல்லூரை சேர்ந்த ரோலக்ஸ் (எ) டில்லிபாபு (24) எனத் தெரியவந்தது. அவரிடம் தப்பியோடி 3 பேர் குறித்து கிடுக்கிப்பிடியாக விசாரித்தனர். இதில், தப்பியோடிய 3 பேரும் அத்திப்பட்டு புதுநகர் ரயில்வே மேம்பாலம் அருகே பதுங்கியிருப்பதாக போலீசாருக்குத் தெரியவந்தது.

இதைத் தொடர்ந்து, நேற்று மாலை அப்பகுதியில் மீஞ்சூர் போலீசார் அதிரடி சோதனை நடத்தினர். இதில், அங்கு பதுங்கியிருந்த 3 போதை ஆசாமிகளையும் விரட்டி பிடித்து காவல் நிலையம் கொண்டு வந்து விசாரித்தனர். அவர்கள் வல்லூரை சேர்ந்த லோகேஷ் (22), சித்திக் (19), அத்திப்பட்டை சேர்ந்த செந்தமிழ்செல்வன் (24) எனத் தெரியவந்தது. மேலும், இவர்கள் 4 பேரும் கஞ்சா போதையில் செயின் பறிப்பில் ஈடுபட்டபோது கல்லூரி மாணவி சவுமிய பாத்திமா தடுத்ததாகவும், அந்த ஆத்திரத்தில் அவரை மீன் வெட்டும் கத்தியால் சரமாரி வெட்டியதாகவும் தெரியவந்தது. இதன் பின்னர் 4 பேரும் கைது செய்யப்பட்டனர். பின்னர் 4 பேரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

## சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் தொழிலாளிக்கு சாகும் வரை ஆயுள் தண்டனை

**தூத்துக்குடி, ஏப்.18:** தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் அருகே 14 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த தொழிலாளிக்கு சாகும் வரை ஆயுள் தண்டனை விதித்து தூத்துக்குடி போக்சோ நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

தூத்துக்குடி மாவட்டம் ஏரல் பகுதியைச் சேர்ந்தவர் மகாராஜன் (42), தொழிலாளியான இவர், கடந்த 2020-ம் ஆண்டு அதே பகுதியை சேர்ந்த 14 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்ததுடன், கொலை மிரட்டலும் விடுத்துள்ளார்.

இதுகுறித்த புகாரின் பேரில், ஸ்ரீவைகுண்டம் மகளிர் போலீஸார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குபதிவு செய்து, மகாராஜனை கைது செய்தனர். இந்த வழக்கு விசாரணை தூத்துக்குடி போக்சோ நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

குற்றம்சாட்டப்பட்ட மகாராஜனுக்கு, இயற்கை மரணம் வரும் வரை ஆயுள் தண்டனை மற்றும் ரூ.12,500 அபராதம் விதித்து நீதிபதி பிரீத்தா தீர்ப்பளித்தார். மேலும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு அரசு நிவாரண நிதியிலிருந்து ரூ.5 லட்சம் வழங்கவும் உத்தரவிட்டார்.

இவ்வழக்கின் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத் தந்த ஸ்ரீவைகுண்டம் டிஎஸ்பி நிரேஷ் மற்றும் வழக்கை திறம்பட புலனாய்வு செய்த அப்போதைய காவல் ஆய்வாளர் லெட்சுமி பிரபா, சிறப்பாக வாதிட்ட அரசு தரப்பு வழக்கறிஞர் ஜூடு ஏஞ்சலோ, தலைமை காவலர் அரிராணி ஆகியோரை எஸ்.பி. மதன் பாராட்டினார்.

## ஜனநாயகன் திரைப்படம் இணையத்தில் வெளியான விவகாரம்: சினிமா உதவி எடிட்டர் உட்பட 3 பேர் கைது

**சென்னை, ஏப்.18:** ஜனநாயகன் திரைப்படம் இணையதளங்களில் சட்ட விரோதமாக வெளியாகக் காரணமாக இருந்ததாக சினிமா உதவி எடிட்டர் உள்ளிட்ட மேலும் 3 பேரை சைபர் க்ரைம் போலீஸார் கைது செய்துள்ளனர்.

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் நடிகர் விஜய் நடிப்பில், இயக்குநர் ஹெச்.வினோத் இயக்கத்தில் உருவான திரைப்படம் ஜனநாயகன்.

விஜய்யின் திரைப்பயணத்தில் இது கடைசிப் படம் என்பதால், அவரது ரசிகர்கள் மத்தியில் இப்படத்துக்கு பெரும் எதிர்பார்ப்பு நிலவியது.

கடந்த ஜனவரி மாதம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வெளியாக வேண்டிய இப்படம், தணிக்கை சிக்கல்களால் தள்ளிப்போனது.

நீண்ட போராட்டத்துக்குப் பிறகு, கடந்த மாதம் மறு தணிக்கைக் குழு படத்தை ஆய்வு செய்தது. விரைவில் தணிக்கைச் சான்றிதழ் பெற்று படம் திரையரங்குகளில் வெளியாகும் என ரசிகர்கள் ஆவலோடு காத்திருந்த நிலையில், ஜனநாயகன் திரைப்படத்தின் முழுப்பதிப்பும் இணையதளங்களில் சட்ட விரோதமாகக் கசிந்தது.

இது படக்குழுவினர் மட்டுமின்றி, சினிமா துறையையே அதிர்ச்சி அடையச் செய்தது. இந்த விவகாரம் தொடர்பாக டிஜிபி அலுவலகத்தில் அளிக்கப்பட்ட புகாரின்பேரில், மாநில சைபர் க்ரைம் போலீஸார் விசாரணை நடத்தினர்.

முதல்கட்டமாக படம் வெளியான அனைத்து இணையதள முகவரிகளையும் கண்டறிந்து, அவற்றை சைபர் க்ரைம் போலீஸார் முடக்கினர். மேலும் படங்களை நண்பர்களுக்கு பகிர்ந்த 6 பேரை அடுத்தடுத்து கைது செய்தனர். மேலும் திரைப்படம் கசிய மூளையாகச் செயல்பட்டது யார் என தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டது. இந்நிலையில் ஜனநாயகன் திரைப்படத்துக்கான எடிட்டிங் ஸ்டூடியோவில் உதவி எடிட்டராக பணிபுரிந்தவர் கைது செய்யப்பட்டார்.

இவர்தான் திரைப்படத்தின் ரீல்களை திருடிச்சென்று அதை இணையதளத்தில் கசியவிட்டுள்ளார். இவருக்கு உதவியாக இருந்த மேலும் 2 பேரையும் போலீஸார் கைது செய்தனர்.

இவர்கள் 3 பேரும் சென்னையைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பணத்துக்காக இதுபோன்ற செயலில் ஈடுபட்டார்களா? அல்லது வேறு ஏதேனும் பின்னணி உள்ளதா? என சைபர் க்ரைம் போலீஸார் தொடர்ந்து விசாரிக்கின்றனர்.

# சென்னையில் இளநீர் விலை 80 ரூபாயாக உயர்வு




**சென்னை, ஏப்.18:** கோடைகாலம் தொடங்கி விட்டாலே இளநீர் மற்றும் பழச்சாறுகளின் விலை உயர்ந்து விடுகிறது. இது ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் விலை உயர்வு என்றாலும் இந்த ஆண்டு தேர்தல் காலம் என்பதால் இளநீர் விற்பனை அதிகரித்துள்ளது. இதனால் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இளநீர் விற்பனை அமோகமாக நடைபெற்று வருகிறது.

தேர்தல் பணியில் ஈடுபட்டு உள்ள ஊழியர்கள், பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள தொண்டர்கள் வெயிலின் தாக்கத்தை தாங்க முடியாமல் பழச்சாறு, குளிர்பானங்கள், தர்பூசணி, கிர்ணி பழம், இளநீர் ஆகியவற்றை வாங்கி சூட்டை தணிக்கிறார்கள்.

வெயிலின் தாக்கத்தால் உடலில் நீர்ச்சத்து குறையாமல் இருக்கஇயற்கைஉணவுகளையும் சிலர் எடுக்கிறார்கள். சென்னையில் வீதிக்கு வீதி இயற்கை உணவுகள், பழங்கள், எலுமிச்சம் ஜூஸ், ரஸ்னா, ரோஸ் மில்க் மற்றும் கூழ் வகைகளும் அதிகமாக விற்பனையாகிறது.

இதில் இளநீர் விலை மட்டும் அதிகமாக உள்ளது. மற்ற இயற்கை பானங்களை விட இளநீர் விலை கோடை காலத்தில் இரு மடங்காக உயர்ந்து விட்டது. பொள்ளாச்சி இளநீர் மற்றும் கடலூர், பாண்டிச்சேரி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து வரும் இளநீர், சென்னை தேவையை பூர்த்தி செய்கிறது.

பொள்ளாச்சி இளநீர் 80 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. மற்ற இளநீர் 50, 60 ரூபாய்க்கு விற்கிறார்கள். கடந்த மாதம் வரை 40 ரூபாய்க்கு விற்கப்பட்ட இளநீர் இப்போது 60, 70 ரூபாய் வரை நிற்கிறார்கள்.

கோடை காலத்தை பயன்படுத்தி இளநீர் உற்பத்தியாளர்கள் விலையை உயர்த்தி விடுகிறார்கள். அதனால் அதிக விலை கொடுத்து வாங்குவதால் கூடுதல் விலைக்கு விற்க வேண்டிய நிலை ஏற்பட்டு உள்ளது என்று வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதுவரையில் இளநீர் தட்டுப்பாடு ஏற்படவில்லை, மே மாதத்தில் நிலைமை எப்படி இருக்கும் என்று தெரியவில்லை. கடந்த வருடத்தை ஒப்பிடும்போது இந்த ஆண்டு இளநீர் விலை 20 ரூபாய் வரை கூடுதலாக விற்கப்படுகிறது.

## அடுத்த 6 நாட்களுக்கு வானிலை எப்படி இருக்கும்?

**சென்னை, ஏப்.18:** சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சுமார் 0.9 கிமீ உயரத்தில், மரத்வாடா முதல் மன்னார் வளைக்குடா வரை உள் கர்நாடகா, ராயலசீமா மற்றும் தமிழகம் வழியாக ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை (Trough) நிலவுகிறது.

இன்று முதல் 21-ந்தேதி வரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்களின் கடலோர பகுதிகள் மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம் மற்றும் புதுவையில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

22 மற்றும் 23-ந்தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள் மற்றும் தெற்கு கடலோர தமிழக மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம் மற்றும் புதுவையில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

இதனிடையே இன்று முதல் 21-ந்தேதி வரை உள் தமிழக மாவட்டங்களில், அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் 2-3° செல்சியஸ் இயல்பை விட அதிகமாக இருக்கக்கூடும். கடலோர தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பை ஒட்டியே இருக்கக்கூடும். மேலும் இன்று முதல் 21-ந்தேதி வரை அதிக வெப்பநிலையும், அதிக ஈரப்பதமும் இருக்கும் நிலையில், கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் அசௌகரியம் ஏற்படலாம்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று மற்றும் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 36-37° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 28° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். அதிக வெப்பநிலையும், அதிக ஈரப்பதமும் இருக்கும் நிலையில், அசௌகரியம் ஏற்படலாம்.

## கரூரில் செந்தில் பாலாஜி ஆதரவாளர்கள் வீடுகளில் வருமான வரித்துறை சோதனை




**கரூர், ஏப்.18:** கரூரில் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியின் ஆதரவாளரும், பிரபல ஒப்பந்ததாரருமான எம்.சி சங்கரின் வீடு மற்றும் அலுவலகங்களிள் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர்.


சட்டப்பேரவைத் தேர்தல் நெருங்கி வரும் நிலையில், தமிழகம் முழுவதும் பரவலாக வாக்காளர்களுக்குப் பணப்பட்டுவாடா செய்யப்படுவதாக புகார் எழுந்தன. இதனடிப்படையில், தேர்தல் ஆணையம் தீவிர விசாரணை நடத்தி வருகிறது.

இந்நிலையில், கரூரில் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியின் ஆதரவாளரும், பிரபல ஒப்பந்ததாரருமான எம்.சி சங்கரின் வீடு மற்றும் அலுவலகங்களில் வருமான வரித்துறை சோதனை நடத்தியது.

அதோடு, கரூர் - கோவை சாலையில் உள்ள, மணி என்பவருக்கு சொந்தமான கொங்கு மெஸ், சக்தி மெஸ் ஆகிய இடங்களிலும் சோதனை நடைபெற்று வருவதாக தகவல் வெளியகியுள்ளது. மத்திய பாதுகாப்பு படையினரின் உதவியுடன் 15 வாகனங்களில் வந்த, 30-க்கும் மேற்பட்ட அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

இந்த முறை செந்தில் பாலாஜி கோவை தெற்கு தொகுதியில் போட்டியிடுகிறார் என்பது கவனிக்கத்தக்கது.

## அதிமுக, பாஜக வேட்பாளர்கள் சொத்து விவரங்கள் குறித்து விசாரிக்கக் கோரி ஐகோர்ட்டில் வழக்கு



**சென்னை, ஏப்.18:** அதிமுக முன்னாள் அமைச்சர்கள் ஜெயக்குமார், சி.வி.சண்முகம், ஆர்.பி.உதயகுமார், திண்டுக்கல் சீனிவாசன், தங்கமணி மற்றும் பாஜக வேட்பாளர் வானதி சீனிவாசன் ஆகியோர் தாக்கல் செய்த வேட்பு மனுக்களில் சொத்து விவரங்களை மறைத்தது குறித்து விசாரணை நடத்த வருமான வரித்துறைக்கு உத்தரவிடக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

சென்னை ராயபுரம் தொகுதி அதிமுக வேட்பாளரான ஜெயக்குமார், விழுப்புரம் மாவட்டம் மைலம் தொகுதி அதிமுக வேட்பாளரான சி.வி. சண்முகம், மதுரை திருமங்கலம் தொகுதி அதிமுக வேட்பாளர் ஆர்.பி.உதயகுமார், திண்டுக்கல் தொகுதி அதிமுக வேட்பாளர் திண்டுக்கல் சீனிவாசன், நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் தொகுதி அதிமுக வேட்பாளர் தங்கமணி, கோவை வடக்கு தொகுதி பாஜக வேட்பாளர் வானதி சீனிவாசன் ஆகியோர் தாக்கல் செய்த வேட்பு மனுக்களில் சொத்து விவரங்களை மறைத்துள்ளதாக, அந்தந்த தொகுதி வாக்காளர்கள் சார்பில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அந்த மனுக்களில், வேட்பு மனுக்களில் சொத்து விவரங்களை மறைத்த விவகாரம் தொடர்பாக வருமான வரித்துறை விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும் என கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது. இந்த வழக்குகள், தலைமை நீதிபதி அமர்வில் விரைவில் விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## செயல்பாட்டுத் திறனில் முக்கிய மேம்பாடு: நாட்டிலேயே முதலிடம் பிடித்தது தெற்கு ரயில்வே




**சென்னை, ஏப்.18:** தெற்கு ரயில்வே கடந்த நிதியாண்டில் (2025-26) செயல்பாட்டுத் திறனில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. புதிய ரயில்களின் அறிமுகம், நேர மேலாண்மை மற்றும் பயணிகளுக்கான கூடுதல் வசதிகள் என அனைத்து பிரிவுகளிலும் முதலிடம் பிடித்துள்ளது.

கடந்த நிதியாண்டில் மட்டும் 28 ஜோடி புதிய ரயில்கள் மற்றும் 2 ஒருவழி சேவைகளை தெற்கு ரயில்வே அறிமுகப்படுத்தியுள்ளது.

இதில் கே.எஸ்.ஆர். பெங்களூரு எர்ணாகுளம் வந்தே பாரத் விரைவு ரயில் மற்றும் தென்னிந்தியாவை வடக்கு மற்றும் கிழக்கு இந்திய மாநிலங்களுடன் இணைக்கும் 10 ஜோடி அம்ரித் பாரத் விரைவு ரயில்கள் அடங்கும்.


மேலும் 12 ஜோடி மெயில், விரைவு ரயில்களும், புறநகர் பயணிகளின் வசதிக்காக 7 ஜோடி பாசஞ்சர் மற்றும் மெமு ரயில்களும் பயன்பாட்டுக்கு வந்துள்ளன. கடந்த நிதியாண்டில், ஒட்டுமொத்த நேர மேலாண்மையில் 93.22 சதவீதம் பெற்று சாதனை படைத்துள்ளது.

மெயில், விரைவு மற்றும் புறநகர் ரயில்கள் என அனைத்தையும் உள்ளடக்கிய இந்த விகிதத்தில், இந்தியாவிலுள்ள அனைத்து ரயில்வே மண்டலங்களையும் விட தெற்கு ரயில்வே முதலிடம் பிடித்துள்ளது. இப்பட்டியலில் மேற்கு ரயில்வே 2-வது இடத்தையும், வடமேற்கு ரயில்வே 3-வது இடத்தையும் பிடித்துள்ளன.

அதேபோல, மெயில், விரைவு ரயில்களை மட்டும் கணக்கில் கொண்டால், தெற்கு ரயில்வே 91.3 சதவீதம் நேர மேலாண்மையுடன் இந்திய அளவில் 3-வது இடத்தைப் பெற்றுள்ளது. இத்தகவல் தெற்கு ரயில்வே செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2 கைகளையும் விட்டுவிட்டு மோட்டார் சைக்கிள் ஓட்டியவருக்கு ரூ.3 ஆயிரம் அபராதம்

**போக்குவரத்து போலீசார் நடவடிக்கை**



**சென்னை, ஏப்.18:** சென்னையில் நேற்று முன்தினம் த.வெ.க. தலைவர் விஜய் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தார். கோட்டூர்புரம் பகுதியில் விஜய் பிரசாரத்தில் ஈடுபட்டபோது அவரது வாகனத்தின் முன்னே 2 கைகளையும் விட்டுவிட்டு உற்சாகமாக ஒரு நபர் மோட்டார் சைக்கிளை ஓட்டி சென்றார்.

இது தொடர்பான வீடியோ காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வெளியானது. இதனைப் பார்த்த கோட்டூர்புரம் போக்குவரத்து போலீசார் அந்த நபர் யார் என்பதை கண்டுபிடித்தனர்.

அவரது பெயர் மனுகுமார் என்பது தெரியவந்தது. இதைத்தொடர்ந்து அவருக்கு ரூ.3 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. போலீசார் அவரிடம் விசாரணை நடத்திய போது விஜய்யை பார்த்த உற்சாகத்தில் இரண்டு கைகளையும் உயர்த்தியபடி மோட்டார் சைக்கிளை ஓட்டியதாக தெரிவித்துள்ளார். ஆனால் வீடியோ காட்சிகள் காரணமாக அவர் போலீசில் சிக்கி அபராதம் கட்ட நேரிட்டுள்ளது.

## குடும்ப தகராறு: ஸ்வீட் மாஸ்டர் மதுவில் விஷம் கலந்து குடித்து தற்கொலை

**தூத்துக்குடி, ஏப்.18:** தூத்துக்குடி மாவட்டம் பசுவந்தனை காவல் எல்லைக்குட்பட்ட அச்சங்குளம் நடுத்தெருவைச் சேர்ந்தவர் வள்ளிநாயகம் (வயது 46). இவருக்கு திருமணமாகி 18 ஆண்டுகள் ஆகிறது. இவரது மனைவி முருகலட்சுமி(36). இவர்களுக்கு சுடலைவடிவு(15), உமா மகேஸ்வரி(11) என 2 பெண் குழந்தைகள் உள்ளனர். வள்ளிநாயகம் ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்தில் ஸ்வீட் மாஸ்டராக வேலை பார்த்து வந்தார்.

வள்ளிநாயகத்திற்கு மது அருந்தும் பழக்கம் இருந்ததாகக் கூறப்படுகிறது. அவர் விடுமுறையில் ஊருக்கு வரும்போதெல்லாம் குடிபோதையில் தனது மனைவியுடன் அடிக்கடி தகராறு செய்து வந்துள்ளார். இதனால் ஏற்பட்ட கோபத்தில் முருகலட்சுமி தனது மகள்களுடன் தந்தைவீட்டிற்குச் சென்று தங்கியிருந்தார்.

நேற்று சத்தியமங்கலத்தில் இருந்து ஊருக்கு திரும்பிய வள்ளிநாயகம், குடிபோதையில் மாமனார் வீட்டிற்குச் சென்று தனது மனைவி மற்றும் மகள்களை வீட்டிற்கு வருமாறு அழைத்துள்ளார். ஆனால், அவர்கள் வர மறுத்ததால் மிகுந்த மனவேதனை அடைந்த வள்ளிநாயகம், இரவு தனது வீட்டில் தனியாக இருந்தபோது, மதுவில் விஷம் கலந்து குடித்து தற்கொலைசெய்துகொண்டார்.

இன்று காலையில் அவரது தாயார் சங்கரம்மாள் வீட்டிற்கு சென்று பார்த்தபோது, வள்ளிநாயகம் வீட்டின் முற்றத்தில் பிணமாக கிடப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். இதுகுறித்து தகவல் அறிந்த பசுவந்தனை போலீசார், சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று உடலை கைப்பற்றினர்.

தற்போது அவரது உடல் பிரேதப் பரிசோதனைக்காக கோவில்பட்டி அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்து பசுவந்தனை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மதுரை சித்திரைத் திருவிழா




ஆயிரம் பொன் சப்பரம் அமைக்க சிறப்பு பூஜை மதுரை ஏப் 18 உலக புகழ் பெற்ற மதுரை சித்திரைத் திருவிழா தொடக்கத்தின் ஒரு பகுதியாக ஆயிரம் பொன் சப்பரம் அமைக்க சுவாமி பொம்மை வாஸ்து பூஜை சிறப்பு ஹோமம் மதுரை தல்லாகுளம், அருள்மிகு பிரசன்ன வெங்கடாஜலபதி திருக்கோயில் சன்னதியில் சித்திரை திருவிழா கொட்டகை முகூர்த்த விழா மற்றும் ஆயிரம் பொன் சப்பரம் தலையலங்காரம் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். வரும் மே 1 ந்தேதி அதிகாலை தங்க குதிரை வாகனத்தில் கள்ளழகர் வைகை ஆற்றில் எழுந்தருளிகிறார்.

## குஷ்பு சென்ற ஹெலிகாப்டரில் தேர்தல் பறக்கும் படையினர் சோதனை



**உதகை, ஏப்.18:** தமிழகத்தில் வரும் 23ம் தேதி ஒரே கட்டமாக சட்டமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெறுகிறது. இதற்கான ஏற்பாடு பணிகளை தேர்தல் ஆணையம் தீவிரமாக நடத்தி வருகிறது.

234 தொகுதிகளிலும் திமுக கூட்டணி, அதிமுக தலைமையிலான என்டிஏ கூட்டணி, நாம் தமிழர், தமிழக வெற்றிக் கழகம் உள்ளிட்ட கட்சிகள் தீவிரமாக வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றன. இதற்கிடையே, பணப்பட்டுவாடாவை தடுக்கும் வகையில் தேர்தல் பறக்கும் படையினர் தமிழகம் முழுவதும் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவ்வபோது, பிரச்சாரங்களுக்கு பயணிக்கும் கட்சி தலைவர்கள், வேட்பாளர்களின் வாகனங்களையும், அவர்கள் செல்லும் ஹெலிகாப்டர்களையும் தேர்தல் பறக்கும் படையினர் சோதனை செய்து வருகின்றனர்.

இந்நிலையில், உதகையில் தமிழக பாஜக துணைத்தலைவர் குஷ்பு சென்ற ஹெலிகாப்டரில் தேர்தல் பறக்கும் படையினர் சோதனையில் ஈடுபட்டனர்.

## காஞ்சிபுரம் மாவட்டத்தில் டாஸ்மாக் கடைகள் 4 நாட்கள் மூடல் - கலெக்டர் அறிவிப்பு




**காஞ்சிபுரம், ஏப்.18:** காஞ்சிபுரம் மாவட்ட கலெக்டர் சினேகா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் சுதந்திரமாகவும், நியாயமாகவும், அமைதியாகவும், சுமூகமாகவும் நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும். எனவே, தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை விதிகள் 2003, விதி12 (2) ன் படி காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள இந்திய தயாரிப்பு வெளிநாட்டு மதுபான சில்லறை விற்பனை கடைகள் மற்றும் அவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள பார்கள் வருகிற 21-ந்தேதி காலை 10 மணி முதல் வாக்குப்பதிவு நாளான 23-ந்தேதி நள்ளிரவு 12 மணி வரையும், வாக்கு எண்ணிக்கை நாளான மே 4-ந்தேதி ஆகிய 4 நாட்களுக்கு மூட உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன்படி, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள உரிமம் பெற்ற எப்.எல்.- 2 முதல் எப்.எல்.-11 வரை (எப்.எல்.-6 தவிர) உரிமம் பெற்ற ஓட்டலுடன் கூடிய மதுபானக் கூடங்கள், டாஸ்மாக் மதுபான கடைகள் மற்றும் அதனுடன் இணைந்த மதுபானக் கூடங்கள் ஆகியவை மேற்கண்ட நாட்களில் முழுவதுமாக மூடப்பட வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## புவி வெப்பமடைதல் தடுக்க வேண்டி மரக் கன்றுகள் நடப்பட்டது




சிவகங்கை மாவட்டம் இளையான்குடி பகுதியில் புவி வெப்பமடைதல் தடுக்க வலியுறுத்தி சுற்றுச்சூழல் மாசுபாடு குறைய வேண்டி சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் வனவிலங்குகளை பாதுகாக்கும் வகையிலும் பலவகை கொய்யா எலுமிச்சை நவாப்பழம் மாம்பழம் அத்திப்பழம் பலாப்பழம் சீதாப்பழம் மாதுளை அத்திப்பழம் கொடிக்காப்புளி போன்ற வகை ஒரே நாளில் நூறு வகையான மரக்கன்றுகள் நடப்பட்டது சமூக ஆர்வலர் அப்துல் மாலிக் ஏற்பாட்டில் பேரூராட்சி துப்புரவு ஆய்வாளர் தங்கதுரை முன்னிலையில் மரக்கன்றுகள் நடப்பட்டது.

## மானாமதுரை இளையான்குடி பகுதியில் மாற்றுத் திறனாளிகள் பிரச்சாரம்: திமுக வேட்பாளர் தமிழரசி தொடங்கி வைத்தார்





சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தனி சட்ட மன்ற தொகுதியில் போட்டியிடும் மானாமதுரை சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் முன்னாள் அமைச்சர் ஆ.தமிழரசி எம்எல்ஏ க்கு திமுக மாநில மாற்றுத் திறனாளி அணி துணை அமைப்பாளர் நகராட்சி கவுன்சிலர் புஷ்பராஜ் தலைமையில் மூன்று சக்கர வாகன ஊர்வலம் மானாமதுரை சிப்காட் பகுதியில் தொடங்கியது. தாயாபுரம், உடை குளம், சுந்தரபுரம் கடைவீதி, தாயமங்கலம்ரோடு வழியாக தாயமங்கலம், கண்ணமங்கலம், புதூர், இளையான்குடி, மேலாயூர், கீழநெட்டூர் வழியாக மாற்றுத்திறனாளிகள் தங்கள் வாகனங்களில் பிரச்சாரம் செய்தனர். இதில் மானாமதுரை திமுக வேட்பாளர் ஆ.தமிழரசி எம்எல்ஏ கொடியசைத்து தொடங்கி வைத்தார். இளையான்குடி முன்னாள் எம்எல்ஏ வடக்கு ஒன்றிய செயலாளர் சுப.மதியரசன், முன்னாள் எம்எல்ஏ நகராட்சி தலைவர் மாரியப்பன் கென்னடி, நகர் செயலாளர் பொன்னுசாமி, ஒன்றிய செயலாளர்அ ண்ணாதுரை மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## கொடைக்கானல்: தேர்தல் பறக்கும்படை சோதனையின்போது காருக்குள் இருந்த துப்பாக்கி; சுற்றுலா பயணிகளை துரத்திப்பிடித்த போலீசார்

**கொடைக்கானல், ஏப்.18:** தமிழக சட்டசபை தேர்தல் 23ம் தேதி நடைபெற உள்ளது. தேர்தல் நெருங்கி வரும் நிலையில் பறக்கும்படை குழுவினர், நிலையான கண்காணிப்பு குழுவினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.



இந்நிலையில், திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் நுழைவு பகுதியில் தேர்தல் பறக்கும்படையினர் இன்று வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, சுற்றுலா பயணிகள் வந்த காரை மறித்து சோதனை நடத்தினர்.

அந்த சோதனையில் காரில் துப்பாக்கி இருந்ததை பறக்கும்படை அதிகாரிகள் கண்டுபிடித்தனர். இதனால் அதிர்ச்சியடைந்த பறக்கும்படை அதிகாரிகள் காரில் வந்த 4 இளைஞர்களிடம் விசாரணை நடத்த முயன்றனர்.

ஆனால், 4 இளைஞர்களும் உடனடியாக காரில் தப்பிச்சென்றனர். இது குறித்து பறக்கும்படையினர் உடனடியாக போலீசாருக்கு தகவல் கொடுத்தனர். தகவலின் அடிப்படையில் விரைந்து செயல்பட்ட போலீசார், சுற்றுலா பயணிகள் சென்ற காரை சில்வர் கஸ்கட் பகுதியில் துரத்திப்பிடித்தனர். பின்னர், அந்த 4 இளைஞர்களை கைது செய்த போலீசார் துப்பாக்கியை பறிமுதல் செய்தனர்.

விசாரணையில் 4 இளைஞர்களும் கொடைக்கானல் சுற்றுலா வந்ததும் அவர்கள் அனைவரும் தென்காசி மாவட்டம் மவலூர் கிராமத்தை சேர்ந்தவர்கள் என்பதும் தெரியவந்துள்ளது. இதையடுத்து 4 இளைஞர்களிடமும் போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.




## ரேஷன் கடைகளில் நம்பர் 1 தரமுள்ள அரிசி கொடுப்போம்: எடப்பாடி பழனிசாமி உறுதி



**சேலம், ஏப்.18:** சேலம் மாவட்டம் சங்ககிரியில் எடப்பாடி பழனிசாமி பரப்புரை மேற்கொண்டார். அப்போது அவர் கூறியதாவது;

“அதிமுக ஆட்சி அமைந்ததும் ரேஷன் கார்டுதாரர்களுக்கு 10,000 ரூபாய், குடும்பத் தலைவிகளுக்கு மாதம் 2,000 ரூபாய் மற்றும் இலவச பிரிட்ஜ் வழங்கப்படும். அதிமுக ஆட்சிக்கு வந்தபின்பு அம்மா உணவகத் திட்டம் முதல்வரின் நேரடி கட்டுப்பாட்டில் இயங்கும். ரேஷன் கடைகளில் நம்பர் 1 தரமுள்ள அரிசி கொடுப்போம்.

மாற்றுத்திறனாளிகள், நடைபாதை ஓரங்களில் கடை வைத்திருப்பவர்கள் கூட்டுறவு சங்கத்தில் வாங்கிய கடன் தள்ளுபடி செய்யப்படும். மாற்றுத்திறனாளிகள் புதிய தொழில் தொடங்க கூட்டுறவு சங்கத்தில் கடனுதவி வழங்கப்படும். அம்மா இல்ல திட்டத்தில் அனைத்து ஏழைகளுக்கும் கான்கிரீட் வீடு கட்டித்தரப்படும். முதியோர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை ரூ.2000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

எல்லா தரப்பு மக்களுக்கும் தேவையான திட்டங்களை கொண்டுவந்து நிறைவேற்றி அவர்களுடைய பாராட்டை பெற்ற அரசாங்கம் அதிமுக அரசாங்கம். அதிமுக ஆட்சி வந்தவுடன் தமிழகத்தில் கஞ்சா விற்பனை முற்றிலும் ஒழிக்கப்படும். போதைப்பொருள் இல்லா மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்குவோம்.”

இவ்வாறு அவர் பேசினார்.

## “எங்கு பார்த்தாலும் பாலியல் வன்கொடுமை, போதைக் கலாசாரம்” - ஸ்டாலின் முன்பு பிரேமலதா பேசியதால் திமுகவினர் அதிர்ச்சி



**சென்னை, ஏப்.18:** “தமிழ்நாடு முழுக்க ஒரே ஒரு குற்றச்சாட்டு தான் அண்ணன் ஸ்டாலின் மேல இருக்கு. அதையும் இந்தப் பெண்கள் கூட்டத்தில் நான் சொல்கிறேன். எங்கு பார்த்தாலும் பாலியல் வன்கொடுமை, போதை கலாசாரம் இருக்கிறது” என முதல்வர் ஸ்டாலின் முன்பு தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா பேசியதால் திமுகவினர் அதிர்ச்சி அடைந்தனர்.

சேலத்தில் திமுக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து, சேலம் கோட்டை மைதானத்தில் முதல்வர் ஸ்டாலின் கலந்து கொண்ட பிரச்சார பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இதில், தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா பேசியதாவது: இன்று தான் முதல்வர் ஸ்டாலினுடன் நடைபயிற்சியில் நானும் நடந்தேன். இதில் முதல்வர் ஸ்டாலின் பெண்களுக்கு அளிக்கும் மரியாதையும், பாதுகாப்பையும் நான் நடந்து செல்லும் போது நேரில் பார்த்து உணர்ந்தேன்.

மதச்சார்பற்ற கூட்டணி இந்த தேர்தலில் 234 தொகுதிகளிலும் வெற்றி பெற்று, எதிர்க்கட்சி என்ற நிலையே இல்லாத அளவுக்கு சாதனை படைக்கும். இந்த தேர்தலில் ஒட்டுமொத்த தாய்க்குலங்களின் வாக்குகள் திமுக கூட்டணிக்கு கிடைக்கும்.

திமுக தலைவர் ஸ்டாலின் பல்வேறு கட்சிகளையும் கூட்டணியில் பொறுமை காத்து அவர்களுக்கு தேவையான மரியாதையை கொடுத்து, ஒரு கூட்டு குடும்பமாய் இத்தேர்தலில் பாதுகாத்து உள்ளார். ஆனால், அதிமுக-வை விட்டு ஓபிஎஸ், செங்கோட்டையன் உள்ளிட்டவர்களும், தேமுதிக உள்ளிட்ட கட்சிகளும் வெளியேறி உள்ளனர். இதன் மூலம் தலைமை பண்பும், மாண்பும் அதிமுக -விடம் இல்லை என்பது தெளிவாகிறது.

தொகுதி மறுசீரமைப்பு தமிழகத்தை வஞ்சிக்கும் செயலாக உள்ளது. சம உரிமை வழங்க வேண்டும் என்பதே நமது நிலைப்பாடு. தமிழ்நாடு முழுக்க ஒரே ஒரு குற்றச்சாட்டு தான் அண்ணன் ஸ்டாலின் மேல இருக்கு. அதையும் இந்தப் பெண்கள் கூட்டத்தில் நான் சொல்கிறேன். எங்கு பார்த்தாலும் பாலியல் வன்கொடுமை, போதை கலாசாரம் இருக்கிறது.

இதைத் தவிர வேறென்ன சொல்ல முடியும்? வேறெதுவும் இந்த ஆட்சிக்கு எதிராகச் சொல்ல முடியாது. நான் சொல்கிறேன், அப்படி ஏதாவது ஒரு பெண்ணுக்கு பிரச்சினை என்றால் நான் அண்ணனிடம் உரிமையோடு எடுத்துச் சொல்வேன். நிச்சயம் பெண்களுக்கு பாதுகாப்பான நிலையை அண்ணன் உருவாக்குவார் என்பதில் யாருக்கும் மாற்றுத் கருத்துத் தேவையில்லை.

சினிமா காட்சி போல கையை அசைத்தால் வாக்கு வங்கி வந்துவிடும் என்பதல்ல அரசியல். லாலிபாப் சாப்பிடும் சின்னப் பையன் அரசியலில் கதாநாயகனாக மாறிவிட முடியாது. 75 ஆண்டு காலம் அரசியலில் நிலைத்து நிற்கும் திமுக, மக்களுக்கான சேவையை நன்கு உணர்ந்து செயலாற்றி வருகிறது. மக்களோடு மக்களாக நின்று அரசியல் செய்வதுதான் தலைமைக்கான பண்பு.

எனவே, மீண்டும் தமிழக முதல்வர் ஸ்டாலின் இரண்டாவது முறையாக தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்பார். திமுக மற்றும் கூட்டணி கட்சிகளுக்கு பெருவாரியான வாக்குகளை அளித்து நாளை நமதே என்பதை நிரூபிப்போம்.

இவ்வாறு அவர் பேசினார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM